Registered No. M. 878

सत्यात् नास्ति परो धर्मः

# பூர்ணசந்திரோதயம்.

## A Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion, Science, Art and Civilization.

| | | |
|---|---|---|
| தொகுதி 7 | 1916-௵ செப்டம்பர் ௴<br>நள ௵ ஆவணி ௴ | பகுதி 5 |

அ. ரங்கசாமி ஐயர், B.A.B.L.,F.T.S, பத்திராதிபர்

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை.

விக்டோரியா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right Reserved.

# பொருளடக்கம்.
# (CONTENTS)

பக்கம்.

1. தற்கால நிலைமை—ஆர். ரங்கஸ்வாமி ஐயர் பி. ஏ. 161
Current events—R. Rangaswamy Iyer. B. A.

2. ஜகத்குரு ஸ்தோத்திரம்—பி. சங்கரசுப்பிரமணிய சாஸ்திரி 168
Star Invocation—P Sankarasubramannia Sastry.

3. மீராபாய்—ஆர். ஸ்ரீனிவாஸ ஐயர் யம். ஏ. 169
Meerabai—R. Sreenivasa Aiyer. M. A.

4. மிகச்சிறு குழந்தைகட்கு பிரஹ்மக்ஞானம்
—பி. குமாரப்ப செட்டி 178
Theosophy for very little children
—P. Kumarappa Chetty.

5. குருக்களும் சிஷ்யர்களும்—C. W. லெட் பீடர் 185
Masters and Pupils—C. W. Leadbeater

6. பிராசீன சமயாசாரங்களும். தற்கால அவசியங்களும்
—ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர் யம். ஏ. 191
Old Creeds & New Needs—R. Sreenivasa Iyer M. A.

7. வறுமை—ஜி. ஏ. சுந்தரம் ஐயர் பி. ஏ., பி. எல்., 195
Poverty—G. A. Sundaram Iyer B. A., B. L.,

8. புத்தக வரவு (Review of Books 200

---

அறிமின்! தெளிமின்!

## மரணத்திற்குப்பின் ஜீவனின் கதி.

பூர்ணசந்திரோதயம் 4-ம் தொகுதி பகுதி 3, 4, 5, 6-ல் "மரண பயம் வேண்டாம்" என்றெழுதியுள்ளதைப் படியுங்கள்.

தனிப் பிரதி அணா நான்கு ஆயினும், எல்லோரும அறிந்து கொள்ளற்பொருட்டு, மேற்கூறிய பகுதிகள் நான்கும் எட்டணாவிற்குக் கொடுக்கப்படும். இம்மாதத்திற்குள் வாங்குகிறவர்களுக்கே இந்த விகிதப்படி கொடுக்கப்படும்.

மானேஜர், பூர்ணசந்திரோதயம்.
பிரஹ்மக்ஞான மந்திரம், மதுரை.

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 7 | 1916-௵ செப்டம்பர்௴ நள ௵ ஆவணி௴ | பகுதி 5

## தற்கால நிலைமை.

சுமார் ஒரு மாதத்திற்குள் மதுரை சௌராஷ்டிர ஹைஸ்கூலில் 6-வது பாரத்தில் படித்துக்கொண்டிருந்த ஒரு வைஷ்ணவ பிராமணப் பையன் மதுரையிலிருக்கும் அமெரிக்கன் மிஷன் பாதிரிமார்களால் ஞானஸ்நானம் செய்விக்கப்பட்டு கிறிஸ்தவனானான் என்றும், அப்பையன் அதன் பிறகு அவனுடைய தகப்பனால் அழைத்துப் போகப்பட்டு அவருடன் இருப்பதாகவும் தெரிய வருகிறது. அவனுடைய தகப்பனார் முதலியவர்கள் அப்பையன் கிறிஸ்தவனாகவில்லை யென்றும் ஞானஸ்நானம் பெறவில்லை யென்றும் சொல்லுகிறார்களாம். வாஸ்தவமாக கிறிஸ்தவனாக மாறிவிட்டானோ அல்லது ஆகும் தருணத்தில் தடுக்கப்பட்டு தகப்பனால் கூட்டிப்போகப் பட்டானோ என்கிற உண்மையானது பாதிரிமார்களுக்கும் அப்பையனுக்கும் தான் தெரியும். இவ்விஷயத்தை ஆலோசிக்குமளவில் தன் மதத்தில் பற்றுள்ள ஒவ்வொரு ஹிந்துவுக்கும் அடியில்கண்ட எண்ணங்கள் உதிக்கும் என்பதில் ஐயமில்லை.

சில மாதங்களுக்கு முன் ரெ. எடி என்ற ஒரு பெயர் போன பாதிரி ஜப்பான் முதலிய தேசங்களுக்குப் போய் கிறிஸ்தவர் குழாத்தை விருத்தி செய்யுமாறு முயன்று அப்பால் மதுரையில் திருமலை நாயக்கர் மஹாலுக்கு அருகாமையில் ஒரு கொட்டகை போட்டு ஐந்து பிரசங்கங்கள் செய்து கிறிஸ்து மதத்தின் மகத்துவத்தையும் இந்தியர்கள் அம்மதத்தைத் தழுவினால் பெறும் லாபத்தையும் மிகப் பெரிய கூட்டங்களுக்கு உபந்யாசங்கள் செய்தார் என்பது பலருக்கு நன்கு தெரியும். அப்பொழுது ஹிந்துப் பெரியோர்களில் பலர் 'இவ்வித உபந்யாசங்களால் என்ன லாபம் நமக்கு கிடைக்கப் போகிறது, புதிதாக ஒன்றும் சொல்லப் போகிறதில்லையே. அங்கு போய் வீணுக் காலம் கழித்து வருவதைக் காட்டிலும் யூனியன் க்ளப் முதலிய ஆராம ஸ்தானங்களுக்குச் சென்று அன்றைய சிரமத்தைப் போக்கடிக்கலாம்' என்று எண்ணிச் சென்றுர்கள். ஒரு சிலர் வேடிக்கை பார்ப்பதற்காக அவ்வுபந்யாசங்களுக்குச் சென்றுர்கள். ஆனல் அவர்கள் உலக நடபடிக்கைகளில் தேர்ந்து நியாயஸ்தலங்களில் கக்ஷிப்பிரதி கக்ஷிகளைப்பற்றி வாதாடி புத்திக் கூர்மைபெற்று இருந்ததால் உபந்யாசகரின் முயற்சிகளைப் பற்றி மனதில் பரிகசித்தவர்களாய்த் திரும்பி வந்தார்கள். ஆனல் அவ்விடத்தில் நூற்றுக் கணக்காகக் கூடியிருந்தவர்கள் இம்மதுரை மாநகரில் வித்யா விஷயமாய் வந்திருக்கும் மாணவர்கள். அவர்களோ நியாய நியாய விரோதங்களை பாகுபாடு செய்யச் சக்தியற்றவர்கள். வீட்டில் தங்கள் ஸநாதன மதத்தைப் பற்றி யாதொன்றும் கற்பிக்கப் படாதவர்கள். அவர்கள் பயிலும் சுதேசிய பள்ளிகளிலும் அம்மதத்தைப் பற்றி யாதொரு விதமான பிடிப்பிணையும் புகட்டப் படாதவர்கள். ஸநாதந தர்மத்தில் நம்பிக்கையில்லாத ஹிந்துவென்ற பெயர் மாத்திரம் கொண்ட உபாத்திமார்களுடைய சகவாசத்தால் ஹிந்து மதத்தில் பற்று நீங்கி, அது அநாகரிகமான மதம்

என்ற எண்ணம் கொண்டவர்கள். இந்நகரிலுள்ள கிறிஸ் தவ பள்ளிகளிலோ நமது ஆரியமதத்தை பகிரங்கமாயும் தூஷணையாகவும் இகழ்ந்து கிறிஸ்தவ வேதமாகிய பைபிளை புகழப் பார்த்தவர்கள். தற்கால மேனாட்டு நாகரிகத்தின் பகட்டால் மதிமயங்கியவர்கள். ஆனால் உண்மை யறிய வேண்டும் என்ற அவாவினர்கள். இத்தகைய மாணவர் கள், அந்த உபந்யாசங்களை தினம்தோறும் கேட்டால் அன்னவர்களில் சிலராவது உபந்யாசகரின் சாதுர்யத் தால் மயங்கியது என்ன ஆச்சரியம்? உபந்யாசங்களைக் கேட்டு வீட்டுக்காவது பள்ளிக்கூடங்களையடுத்த உறை விடத்துக்காவது வந்தவுடன் உபந்யாசத்தில் நிகழ்ந்த விருத்தாந்தங்களைக் கேட்டு, அதில் கூறப்பட்ட நியாய வழுக்களை எடுத்துக் காட்டி, கிறிஸ்து மதத்தின் குறைவுகளையும் இந்து மதத்தின் மேன்மையையும், எடுத் துரைக்கத் தக்கார் யார் உளர்? அல்லது கிறிஸ்தவ உபந் யாசத்தின் மறுதினமே அதைக் கண்டனம் செய்து மாண க்கர்களை இருகக்ஷிகளையும் தெரியும்படி செய்தவர் யாவர்? அந்தோ பாவம்! மதுரை மாநகரில், இந்து மதத்திற்கே தலைநகர்களில் ஒன்று என்று சொல்லக்கூடிய இப்பெரும் பட்டணத்தில், ஒருவர்கூட நம் சிறுவர்களுடைய மனோபா வங்களையும் அவர்களது நோக்கங்களையும், அவைகள் இவ்வு பந்யாசங்களைக் கேட்டால் எவ்வாறு மாறும் என்பதையும பற்றி எண்ணியது கிடையாது என்றால் பொருந்தும். அப் படியிருக்க சில மாணவர்களின் மனம் கிறிஸ்து மதத்தின் சார்பாய் மாறியது என்பதில் ஆச்சரியம் என்ன? பின்னை யாச்சரியம் என்னவென்றால், மற்ற அநேகருடைய மனங் கள் கூட ஏன் அம்மதத்தின் சார்பாய் மாறவில்லை யென்பதே.

* * *

அதன் பிறகு எடி துரையும் ஓய். எம். ஸி. ஏ என்ற வாலிபரின் கிறிஸ்தவ சபையின் மதுரை கிளைச் சபைகாரிய தரிசி பிரைஸ் என்ற துரையும், இன்னும் சில பேர்களும் தாங்கள் எக்காரணம் கொண்டு இந்நாடு வந்திருக்கிறார்க

ளோ அக்காரியத்தை முடிக்கும் வண்ணம் மிகவும் உழைத்தார்களாம். சில நாட்கள் பாடமாகவே பைபிள் புத்தகத்தைக் கற்பித்தார்களாம். சிறுவர்களிடம் தாங்கள் கொண்ட அன்பைக் காட்டினார்களாம். அவர்களும் பாதிரிமார்களின் மனைவிகளும் இப்பையன்களை வரவேற்று உற்சாகப்படுத்தினார்களாம். இனமாக பரிசுகளும் கொடுத்தார்களாம். பையன்கள் கிறிஸ்தவர்களாக மாறினால் குடும்ப சொத்துக்களில் பாத்தியதையை இழக்க மாட்டார்கள்என்று சொன்னார்களாம். பாதிரிமார்கள் வண்டியில் இவர்களுக்கு தங்களுடன் சரியாசனம் கொடுத்து வெளியில் சென்றார்களாம். சில பையன்கள் வீட்டுக்குக்கூட பாதிரிமார்கள் வண்டியில் வந்து சம்பாஷித்தார்களாம். இம்மாதிரி உற்சாகப்படுத்தியதால், சிறுவர்கள் மனது கொஞ்சம் திரும்பியது ஆச்சரியமில்லை. இந்து மதத்தை சிலாகித்துக் கூறுவாரைக்காணோம். கிறிஸ்து மதத்தைப் போற்றுவார் பலர் இருக்கிறார்கள். ஆகையால் இவ்வாலிபர் மனோபாவத்தைப் பற்றி அனுதாபத்தோடு ஆராயுங்கால், அவர்கள் பால் கோபம் கொள்ள யாதொரு காரணமும் இல்லை.

*
* *

மேற் கூறியபடி பாதிரிமார்கள் செய்ததாகத் தெரிய வருகிற யாதொன்றும் சட்ட விரோத மென்றாவது நியாய விரோதமென்றாவது சொல்லுதற்கு இடமில்லை ஆயிரக்கணக்கான மயில்கள் தூரமுள்ள தேசங்களிலிருந்து வந்தவர்கள் அஞ்ஞானத்தில் உழன்று, இறந்த பின்னர் அந்தமில்லாத பாழும் நரகத்துக்குப் போகப் போவதாய் .(அவர்களுடைய சிற்றறிவில்தோன்றியபடி) நினைக்கப்பட்ட நம்மை, உத்தாரணம் செய்வதற்கென்றே ஏராளமான பணச் செலவுடன் இந்நாடு வந்திருக்கும் பாதிரிமார்கள் வந்த காரியத்தை நாடாமலிருந்தால் அவர்களைப் போல் மதியிலிகள் உண்டா? எண்ணிய கருமத்தை முடிக்கவல்ல அமெரிக்கன் பாதிரி

மார்கள், ஏன் சும்மாவிருக்கவேண்டும், நமக்கு உயர்தர ஆங்கிலக் கல்வி கற்பிப்பதுதான் அவர்களது பாரமார்த்திகநோக்கம் என்று எண்ணுவது நம்முடைய அறிவின்மையல்லவா. கல்வி கற்பிப்பது கிறிஸ்தவர்களாக மாற்றுவதற்குள்ள பல முறைகளில் ஒன்றேயென்று அறிவது மிகவும் சிரமமா? அப்படியிருக்க நாம் யாது செய்கிறோம்? ஒரு கோடரியானது மரத்தாலாகிய பிடியில்லாமல் மரத்தைவெட்ட இயலாததுபோல நம்முடைய உதவி யில்லாமல் பாதிரிமார்கள் அவர்களது கோரிக்கையை நிறைவேற்ற முடியாதென்பது திண்ணம். முதன் முதல் நாம் வீட்டிலும் பள்ளியிலும் ஸநாதன மதத்தினுடைய படிப்பினையை கற்பியாமலிருப்பதும், பாதிரிமார்கள் பள்ளிகளுக்கு நமதுசிறுவர்சிறுமிகளை யனுப்புவதும், அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆரம்பங்களனைத்துக்கும் திரவிய சகாயம் செய்தலும், பாதிரிமார்கள் கட்டும் பலவித கட்டிடங்களுக்கு ஏராளமான திரவிய தானம் செய்து அங்கு வருபவர்களுக்கு கிறிஸ்தவ புத்தகங்கள் துண்டுப் பத்திரிகைகளை வாசிக்கும்படி செய்வதற்குக் காரணமாயிருப்பதும், நாம் பாதிரிமார்களுக்குச் செய்யும் சகாயமல்லவா? ஆனால் நாம் மேற்சொன்ன காரியங்களைச் செய்வது புத்தி பூர்வமாக வேண்டுமென்றல்ல. அநேகர் யோசியாமலே உதவி செய்கிறார்கள். நம்முடைய பணத்தைச் செலவு செய்து பள்ளிக்கூடங்கள் முதலியன கட்டி நம்முடைய ஹிந்து மதத்தின் தத்வங்களைக் கற்பிப்பது முடியாத காரியமா? ஒய். எம். ஸி. ஏ. மாதிரி இந்தியா முழுவதும் "வாலிபர்களின் இந்திய சபை" என்ற ஒய். எம். ஐ. ஏ. சபைகள் ஸ்தாபித்து மதாந்தர பிரவேசத்தைத் தடுப்பது கூடாத காரியமா? இப்போழ்துள்ள கல்லூரிகளில் அவ்வம்மாணுக்கருடைய மதங்களை அவரவர்களுக்கு போதிப்பது முடியாத காரியமா? இத்தகைய காரியங்களை முடிக்கவல்ல ஸ்ரீமான்களில்லையா? உயர்தர உத்தியோகஸ்தர்களுடைய திருப்திக்

காக எவ்வளவோ ஏராளமான திரவியத்தைச் செலவு செய்யத் தயாராக இருக்கும் கனதனவான்கள் மாதிரு பூமியுடையவும் ஸ்வமதத்தினுடையவும் மேலீட்டுக்காகவென்று முன் வருவார்களானல், மேற் கூறிய ஒவ்வொரு காரியமும் எளிதில் நிறைவேறும் என்பதில் எள்ளளவிலும் ஐயமில்லை.

*
* *

இனிமேலாவது நாம் விழிப்பாளிகளாயிருந்தால் பாதிரிகளுக்கு யாதொரு அலுவலும் இல்லாமல் செய்யமுடியும். நம்முடைய கல்லூரிகளில் மத விஷயமான போதனைக்கு உபாத்திமாரை நியமிப்பதுடன் அடிக்கடி இந்து மதத்தை புகழ்ந்து பிரபல வித்வான்களுடைய உபந்யாசங்கள் நிகழும்படி செய்வது. எது எவ்வாருனுலும் கிறிஸ்தவ கலாசாலைகளுக்கு சிறுவர்களை யனுப்பாமலிருப்பது. 'கீழ் ஜாதி' யாருக்கு ஹிந்து மதத்தின் உண்மைகளைப் புகட்டுவது. அவர்களைச் சிறுகச் சிறுகச் முன்னுக்கு கொண்டுவரும் ஏற்பாடுகளைக் கைக்கொள்வது, இந்த வகைகளில் நாம் விடா முயற்சியுடன் முயன்ருல் சீக்கிரத்தில் நல்ல பலன் சித்திக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

*
* *

சில நாளைக்குமுன்னர் மதராஸில் மதாந்தரப்பிரவேசம் செய்தவர்கள் தங்கள் தவறுதலைக்கண்டு திரும்பி ஹிந்துவாக வேண்டுமென்று விருப்பமுள்ளவர்களை ஏற்றுக்கொள்ளுவதற்காக 'சுத்திசபை'யென்று சென்னையில் ஏற்படுத்தப் பட்டிருப்பதாகக் கேட்க சந்தோஷமடைகிருேம். வடக்கு இந்தியாவில் ஆரிய சமாஜத்தில் மற்றை ஜாதியாரையும் மதாந்தரப்பிரவேசம் செய்தவர்களையும் திரும்பி ஆரியர்களாக மாற்றுவதால் கிறிஸ்தவ பாதிரிமார்களுக்கு அவ்விடங்களில் அநேகமாய் செல்வாக்கில்லையென்று தெரியவருகிறது.

* *
*

ஹிந்து மதத்தைப் போற்றியுள்ளவும், வழக்கமாக அம் மதத்திலிருப்பதாகக் கூறப்படும் குறைகளுக்கு சமாதானமும் கூறியுள்ளவுமான புத்தகங்களையும், துண்டுப் பத்திரி

தைகளையும் அச்சிட்டு கனவான்கள் மாணுக்கர்களுக்கு இனுமாகக் கொடுத்துவிடலாம். அத்தகைய புத்தகங்களும் துண்டுப் பத்திரிகைகளும் ஏராளமாக நமது பிரசிடெண்டவர்களால் வெளியிடப்பட்டிருக்கின்றன. அவைகளை யெத்தனையோ மாணுக்கர்கள் விலைக்குவாங்கி பயனடைந்திருக்கிறார்கள் அவைகளைச் சிறுவர்கள் படிக்கும்படி செய்ய என்ன என்ன ஏற்பாடுகள் கூடுமோ, அவைகளையும் செய்வது நன்முயற்சியாகும்.

*
* *

ஆனுல் நாம் வேறுவழியிலும் முயற்சிசெய்வது அவசியமே. பாதிரிக்கல்லூரிகள் வெளிதேசங்களிலிருந்து கொண்டுவந்த தனத்தைக்கொண்டே தங்கள் வரவு செலவுகளை நடத்திவந்தால் வேண்டுமென்ற கற்பினைகளை யெல்லாம் கற்பிக்கலாம். அதை ஆக்ஷேபிக்க நமக்கு காரணம் இல்லை. ஆனுல் வருஷந்தோறும் சர்க்காரிலிருந்து கற்பினைக்கு உதவிப்பொருள்களும், கட்டடத்துக்கு உதவிப்பொருள்களும் பெறுகிறார்கள். சர்க்கார் பணமாவது யாது? நாம்வரியாய்ச் செலுத்தும் தொகையல்லவா? ஆகையால் நாம் கொடுக்கும் உதவியைப் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு பாதிரி பள்ளிக்கூடமும், கட்டாயமாய் ஒவ்வொரு மாணுக்கனும் கிறிஸ்தவ சாஸ்திரத்தை அப்பியசிக்கவேண்டுமென்று நிர்பந்திக்க நியாயமில்லையென்று ஏற்படுகிறது. பாதிரிமார்களால் கொடுக்கும் பரிசுகளையடையவேண்டுமென்றே அல்லது அவர்கள் தயவு வேண்டுமென்றே அல்லது கிறிஸ்து மதத்தில் பற்றுள்ள காரணத்தினுலோ இஷ்டப்பட்டு பைபிள் கிளாஸுக்குப் போகும் பையன்களுக்கு வேண்டுமென்றுல் அக்கற்பினைகளைப் போதிக்கலாம். ஆனுல் சகலமானவர்களும் கட்டாயமாக கிறிஸ்தவ போதனைக்குட்படவேண்டுமென்பது நியாய விரோதம். அதை நீக்கவேண்டுமென்று சர்க்காரை வற்புறுத்தி வேண்டிக்கொள்வது நம்மவர் முதற்கடமையாகும்.

ஆர். ரெங்கசாமி ஐயர்.

---

188

# ஜகத்குரு ஸ்தோத்திரம்.

நோட் மெட்டு தாளம்: ஆதி

ஶ்ருதாத்ய நாயாரங்கே । ஶோகவர்யுதாநாம்
வீதாவதீநாம் நந்தநேதவிபுவியாநாம் ।
ஸாஹ்யம் தவ காங்க்ஷந்தி ஜநாயே ஹ்ருதயேந
க்ஷயாவே தீபுயாऽநந்த ப்ரஹாணாऽதிஶயேந ॥

பஞ்ச சாமர விருத்தம்

கயே தயாநிதே । ஸ்வத்வதாஹிதி ப்ரபாஷணாக்ஷ
வியந்த்ரதத்வராஜ ஜநாஜ வியேஹிஶாஸ்த்ரஷண்ணாஜ
ஸம்ஹாப்ய தாப்ரவார்யகேஸ்ந்ஹாக்ஷிகே தரப்திம்ஸரம்
ப்ரஜா விஹாஜகேஷந்த வ ப்ரவாயப் வாஹிஸத்த ॥

சற்பட பஞ்சரீ மெட்டு(தேசிய தோடி அல்லது பேஹாக்)

கவதர கருணா பப்ரணாப் ஸ்வாந்த
ஸத்யஸங்கவேநாவ்ய வதர காந்த ।
நரவரநாயக । பவதவதாரம்
ப்ரதிவாத்யத ஜஹாऽவச ஸாரம் ॥
ஜய ஜய ஜய ஜய கருணாகர
ஸகலஜந மநோரத தார ।
ஜய ஜய ஜய ஜய । பவதவதார
ஸகல தவ: ஶ்ரேயஸ்ஸமுதயஸார ॥

ஓம் தத் ஸத்.

பி. சங்கர சுப்பிரமணிய சாஸ்திரி.
ஸம்ஸ்கிருத பண்டிதர்.
ஜோஸப்ஸ் ஸ்கூல், திருவனந்தபுரம்.

189

## மீராபாய்.

---

### அங்கம் 3. களம் 1.

காலம்:—இரவு. இடம்:—கிருஷ்ணாலயத்தையடுத்த ஓர் வனம். நாடகபாத்திரர்:—மீராபாய்.

மீரா—(உருக்கமாய்ப் பாடுகிறாள்)

"குலந்தருஞ் செல்வந் தந்திடுமெடியார்
படுந்துயராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும்பருளு
மருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந்தந்திடும் பெற்றதாயினு
மாயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான் கண்டுகொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்"

பகவந் நாமமொன்றே சகல துக்கங்களையும் போக்கடிக்கக்கூடியது. அதற்கிருக்கும் சக்தி வேறே யெதற்குளது? அது எதைத்தான கொடுக்கும் எதைத்தான் கொடுக்காதென்பதே கிடையாது. மனதிலிருக்கும் சகல துக்கங்களையும் நிவாரணம் செய்து அளவிறந்த பேரானந்தத்தை விளைவிக்கக் கூடிய ஸ்வபாவம் அதற்கேயுரியது. அப்படியிருக்க அவ்வாநந்தத்தை யனுபவிக்க எல்லாரும் முயலக் காணோமே! அநித்யமாயிருக்கும் பவசாகர விஷய சுகங்களைக் கருதி சாசுவதமாயிருக்கும் பிரஹ்மாநந்தத்தை யடையும் மார்க்கத்தைத் துறக்கிறார்களே. அது ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடியதாகவேயிருக்கிறது-கிருஷ்ணா! இதுவும் உனக்கொரு வேடிக்கைதானோ? எல்லாருக்குமுன்னைக் குறித்துப் பக்தி செய்வதாலுண்டாகும் ஆநந்தம் விளங்கக் கூடாதா. உன்னை ஸ்மரிக்கும் காலத்தில் எனக்களவிலாவாநந்தத்தை யளிக்கிறாயே. அப்படித் தானே யெல்லாருக்கு மளிப்பாய்? அப்படியிருக்க ஜனங்களெல்லாரு முன்னைக் குறித்து பக்தி செய்வதைத் தவிர வேறொன்றையும் செய்யமாட்டார்களே. என் பதிக்குமட்டு முன்னிடத்தில் பக்தியில்லாமலிருப்பதேன்? அவருக்கு உன்

னிடத்தில் டக்தியைக் கொடுக்கலாகாதா? அப்படி நீ செய்தால் அதனாலுண்டாகும் நன்மைக் களவுண்டா? பக்தியில்லாமற் போனால் ஜனங்களுக்கு சில சமயங்களில் கிருத்யாகிருத்ய விசாரணம் செய்யும் விவேகம் போய்விடுகிறது. அநேக பாபகிருத்யங்களையும் அதனால் அவர்கள் செய்கிறார்கள். என் பதிக்குபக்தியிருந்தால் என்னைத் துன்புறுத்தாமலிருப்பாரென்பதையும் தவிர ராஜ்யத்துக்கே க்ஷேமமுண்டாகுமே! "யதா ராஜா ததா ப்ரஜா:" அரசர் பக்தராயிருந்தால் ராஜ்யத்திலுள்ள ஜனங்களும் பக்தர்களாயிருப்பார்கள். அதனால் இந்த ஜகத்துக்கே எவ்வளவோ நன்மையுண்டாகும். இப்படி யுலக முழுவதையும் உத்தாரணம் பண்ணக்கூடிய ஒருகாரியத்தை என்நிமித்தமாவது நீ செய்வதுதான் உனக்குக் கஷ்டமா? இச்சா மாத்திரத்தால் இந்த ஜகத்தை சிருஷ்டித்து அதில் கிரீடித்துக்கொண்டிருக்கிற உனக்கெதுதானரிது? நான் முறையிடுவதைக் கேட்டு உன் மனோபீஷ்டத்தைப் பூர்த்தி செய்ய எப்போதுனக்கு மனம் வருமோ தெரியவில்லையே. கிருஷ்ணா!

(கொலையாளிகள் இருவரும் வருகிறார்கள்.)

அதி—அடே அண்ணே, அதோ பார்த்தயாடா ராணியம்மா ஒக்காண்ட்ருக்காங்க. அவங்களக் கண்ணால் பார்த்தப் பறம்கூட ஒனக்கு கொல்ல மனசு வருமாடா.

ஏக—அடே. ஒனக்கே தாட்டி பித்துகித்து புடிச்சிக்கிட்டதோ. என்னடா பேத்துபேத்துன்னு பேத்ரே? இல்லாத பயமெல்லாம் பயப்படராயே. இப்படி தொடை நடுங்கிக்கிட்டேயிருந்தா அந்த ராசா சொன்ன வேலையை எப்படிரா முடிச்சுப் போடரது? இங்கே பாப்படாச்சே என்னடாசொன்னே நீ. அத்துக்குள்ளே அதை மறந்திட்டையா. வாயைத் தரக்காதே நான் சொல்ரதைக் கேக்ரேன்னுசொல்லலே? நல்ல ரோக்கியண்டா நீ! அடே வளக்குக் கொளுத்தி ஒரு சுமார் ரண்டு மூனு நாலு அஞ்சு நாளியாச்சுனு

வச்சுக்கோ யேன். இங்கயே இந்தா அந்த புதிருலே ஒளிச்சுக்கிட்டு நின்றுடுவம். கொஞ்ச நாளி களிச்சு, இந்த ஊரோசையெல்லாம் நின்னத்துக் கப்பறம் வேலேயை முடிச்சுடுவம் தம்பீ.

அதி—நீ என்ன வேணுனும் சேஞ்சுக்கோ. எனக் கொன்னும் தெரியாது.

மீரா—இந்த இடமெவ்வளவு நிச்சப்தமாயிருக்கிறது! இந்த நிச்சப்தத்தை யுத்தேசித் தல்லவா யோகிகள் நிர்மானுஷ்யமான அரண்யங்களின் மத்தியில் தங்கள் வாசஸ்தானத்தை யேற்படுத்திக் கொள்ளுகிறார்கள். இப்படி நிச்சப்தமாயும் நிர்மானுஷ்யமாயு மிருக்கு மிடங்களெந்தெந்தக் காரியங்களுக் குபயோகப் படுத்தப் படுகின்றன!! இப்படிப் பட்ட விடங்களிலேதான் த்ருவன் முதலிய பக்தர்கள் பகவானைக் குறித்துத் தவம் செய்து அவரை ஸாக்ஷாத்காரம் பண்ணியிருக்கிறார்கள்! இப்படிப்பட்ட விடங்களிலேதான் கிராமங்கள் பட்டணங்கள் முதலிய விடங்களை ஒரேசமயத்திற் கொள்ளையிடுகிற கள்ளக் கூட்டத்தார்கள் தாங்களொன்று சேர்ந்து பிறரிடமிருந்து பறித்த பொருளைப் பங்கு போட்டுக் கொள்ளுகிறார்கள்! இப்படிப்பட்ட விடங்களிலே தானுலகத்தைத் தனக்குக் கீழ்ப்படுத்தி அதை ஹிம்ஸிக்கும்பொருட்டு சித்திகளை யடையவேண்டுகிற க்ஷுத்திரப் பிரயோகிகள் தங்களுக்கு வேண்டிய சாமக்கிரியைகளையெல்லாம் சேர்த்துக்கொண்டு செய்யவேண்டிய கிருத்யங்களைச் செய்யத் தொடங்குகிறார்கள்; இப்படிப்பட்ட விடங்களிலேதான் கொலையாளிகள் தாங்கள் கொலை செய்யவேண்டியவர்களைக் கொலை செய்து, தாங்கள் செய்த காரியத்தை யுலகமறியா வண்ணம் பிணங்களைப் பூமிக்குட் புதைக்கிறார்கள்; இப்படிப்பட்ட விடங்களிலேதான் தற்கொலை செய்து தங்கள் வாழ்நாட்களை யொழித்துக்கொள்ளவிரும்புகிறவர்கள் தங்களெண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளுகிறார்கள். என்ன வாச்சரியம்! ஒரேயிடம் வெவ்வேறு பய

னுள்ள காரியங்களுக் குபயோகப் படுத்தப்படுகிறது! இந்த நிமிஷத்திலிந்த விடத்திலென்ன நடந்துகொண்டிருக்கிறதோ, யார் கண்டார்கள்? ஆனால் எவ்விடத்தில் என்ன காரியம் நடந்தாலும் அது ஸர்வாந்தரியாமியாயிருக்கும் பகவானுக்குமட்டும் தெரியாமற் போகாது. அவர் சகல கருமங்களுக்கும் ஸாக்ஷியாயிருந்து அவைகளுக்குத் தக்கபடி பலன்களை யளித்துக் கொண்டு வருகிறார். (கொலையாளிகளிருவரு மொருவரை யொருவர் பார்த்து விழிக்கிறார்கள்.)

அதி—அண்ணே, என்னடாது. நாம் இங்கிட்டிருக்கிறது அவங்களுக்கு தெரிஞ்சுடுத்தோ, என்னமோப்பா. எனக்கு காலு கையெல்லாம் பதர்ரது. எம்மாரு படபடன்னு அடுச்சுக்கிறது. நான் சொல்ரதைக் கேளு. அந்த ராசாதாரேன்ன பணத்தெல்லாம் நீவாணா எடுத்துக்கோ. இன்னும் எதாவது வேணுமின்னாக்கே கூட நான் தந்திடுறேன். என்னாலே யிந்த வேலை யொன்றும் செய்ய கட்டாதண்ணே. நீயே வேணா செய்திட்டு பணக்காரனாப்போ.

ஏக—(தனக்குள்) இந்தப் பயலை வச்சுட்டு வேலையை முடிச்சுடலாமென்னிருந்தேன். இவன் இப்படிப் பேசரானே. எனக்கும் என்னவோ மாதிரிதானிருக்கு, என்னா இருக்கட்டுமே. நான் ஆம்பளையில்லே? ஆனாக்கே இந்தம்மையே யாரு கொல்லுவாங்க? (வெளிப்படையாக) எலெ, நல்ல கொம்பண்டா நீ. நா இளிச்சவாப் பயேன்னு நெனச்சிட்டையோ. பணத்தைக் கொடுத்துட்டாணும் தான் சும்மாருக்காணும். நீ தான் கொன்னுடேன். என் பணத்தை எடுத்துக்கயேன்; நான் பணத்துக்கா ஆசைப்படரேன்? நம்ம உசிரைக் காப்பாத்திக்க வாண்டாமா. அடே தம்பி! இங்கிட்டு வாடா சொல்ரேன். என்னவோ வீர்வீர்னு வீர்ரையே, எனக்கு மட்டும் இந்த அம்மாவை கொல்ல மனசிருக்குன்னு நெனச்சுக்கிட்டே? ஒரு பொம்பளையைக் கொல்ரதின்னா யாருக்குத்தாண்டா கைவரும்? அதுவும் இந்த அம்மே, நல்ல அம்மே, தங்க அம்மே, இவங்களை ஆராவது

கொல்லு வாங்களா. இதெல்லாம் சொல்லி என்ன ஆவும்? நம்ம ராசா பொல்லாதவன் தம்பீ. நம்ம உசிரு அவங்கிட் டேன்னு இருக்குது.

அதி—அண்ணே. என்னடா உசுரு உசுரு எங்கரே. என்ன உசுரா இருக்கட்டுமே? கொஞ்சம் நிஞ்சம் இன்ன தைத் தான் செய்யாதூன்னு கெடயாதாடா? இந்த அம் மையை கொன்னிட்டு நமக்கு உசுரு என்னத்துக்கு? அப் படி யென்னடா நமக்கு உசுரு வெல்லமாப் போச்சு?

மீரா—எனக்கின்றைபதின மிவ்வளவுநேரம் சென்றும் நித்திரை வரவில்லையே. என்னென்ன வெண்ணங்களெல் லாமோ என் மனதிற் தோன்றுகின்றனவே, என் மனமெங் கெல்லாமோ சஞ்சரிக்கின்றதே, அது சரியல்ல. இப்படி என் மனதை போடவிடக் கூடாது. அதைக் கிருஷ்ண பகவானிடத்தில் நிலை நிறுத்தாததினு லல்லவோ இப்படி யது அங்குமிங்கு மோடித் திரிகிறது. கிருஷ்ணு! அதை யுன்னிடமிழுத்துக்கொள். (பகவானைக்குறித்துப்பாடுகிறுள்.)

ராகம்—பிலஹரி தாளம்—ரூபகம்.

பல்லவி.

உன்னை நம்பினவருக்கும்
பின்னமு முண்டோ—கிருஷ்ணு (உன்னை)

அநுபல்லவி.

அன்னை போலிருந்தெவர்க்கு
மாதர வளிக்கும் கண்ணு (உன்னை)

சரணம்.

மன்னுலகி லென்னைப் போல
இன்னற் பட்டார் யாருமில்லை—கடைக்
கண்ணு லென்னைப் பார்த்தருள் செய்
விண்ணவர்கள் போற்றும் பாதா (உன்னை)

அதி—(கண்ணீர் விட்டு) அண்ணே: நான் சொல்ரத் தைக் கேளு. என்னுலே இதொன்னும் முடியாது. என்னை இன்னமே ஒன்னும் சங்கடப்படுத்தாதே. இந்த அம்மயேக்

கொன்னுட்டு எனக்கென்னத்துக்குடா உசுரு? நீ வேணும்னு என்னை வேணுலும் இப்பவே கொன்னுபோட்ரு. நானிந்த அம்மையைத் தொடமாட்டேன்; அண்ணே, நாம தான் கொளந்தே மொதத்தான் எத்தனையோ கொலை செய்திருக்கமே, அடே கொஞ்ச நிஞ்ச பாவமா நமக்கு வந்திருக்கு? அத்தனை பாவம் போதாதா? இன்னமுமா பாவம்? எனக்கு வாண்டாண்ணே. இத்தனைநாச் செய்திருக்கிறத்துக்கு கொஞ்சமாவது புண்ணியம் செய்ய வாண்டாம் மோச்சம் கெடேக்கும்மடா.

ஏக—(தனக்குள்) இந்தப் பயல் சொல்ரதல்லாம் சரிதான். இத்தனை வருசமா நாங்களும் எத்தனையோ கொலை செய்திட்ருக்கமே, ஒருநாளும் இந்தப்பயல் இப்படி அடிச்சுக்கிட்டது கிடையாதே. ஏதாவது ஒளருவான், சொன்னு சரியாப் போடும். இப்படி நடுங்கானே. எனக்கும் இப்படி மனசு இறங்கினதே கெடயாதே. இந்த அம்மையை பாத்துட்டு கொல்ரதின்னு என்னவோதான் செய்யாது. இந்த உசிரிலே இருக்கிற ஆசேன்னு இப்பிடியெல்லாம் நம்மே செய்யச் சொல்ரது? அந்த ராசா கொன்னுடுவான் எங்கிற பயம்தானே? என்னு உசிரு, என்னு ஆசை? இந்தப் பயல் சிலவேளையிலேதான் என்ன சொல்ரான்னு தெரியாதயே சொல்லுவான், அது சரியா இருக்கும். இப்பவும் அப்படித்தான் சொல்ரானே, என்னவோ. (வெளிப்படையாக) நீ சொன்னதல்லாம் சரிதான் எல்லாத்தையும் ஒப்புத்துக்கிட்டேன். இப்ப சமாசாரத்தை தெரிஞ்சுகிட்டாயே? இந்த வேலையை முடிக்காட்டி அப்புறம் இந்த தேசத்லே இருக்கமுடியாது. வேறே எங்கயாவது ஓடிப்போ வேண்டியத்தான். அப்படி இந்த ஊர்லே இருந்தம், மோசம்தான். நம்மை உசிரோடே வச்சிருக்கமாட்டான் அந்த ராசா, அந்த பொல்லாத ராசா. இப்ப கொன்னுட்டு பணத்தை வாங்கிக்கறதா, இல்லாட்டி ஊரைவிட்டு ஓடிப்போரதா? சொல்லு பாப்பம்.

அதி—அண்ணே, அண்ணே, நீ இப்ப சொன்னயே, அத்தான் சரியான ரோசனை. நான் சொல்ரத்தே கேளு. நாம தான் மூட்டைமூட்டைமூட்டையா பாவத்தை கட்டிக்கிட்ருக்கம். கொஞ்சமாவது மோச்சம் இருக்கட்டும் டா. இந்த அம்மெயே தொடப்படாதுரா. நமக்கு இப்ப சாமி தான் இந்த புத்தியே கொடுத்திருக்கு. அடே, என்ன ராசாடா அவன்? இந்த அம்மெயே எப்படிரா கொல்லணம்னு நெனச்சான்? ஊரே விட்டு ஓடிடுவம். அண்ணே ஒரு ரோசனை தோண்ரது, பலே ரோசனை போ.

ஏக—என்னடாது?

அதி—இப்ப போரது, இந்தம்மெகால்லெவிளரது எல்லாத்தேயும் சொல்ரது, ஊருக்குள்ளே போரது, பொண்டாட்டி புள்ளையை அளச்சுக்கிறது, நமக்கு இருக்கிறதே இடுத்துக்கிறது, ரவக்கே இங்கேவிட்டு ஓடிட்ரது.

ஏக—சரி தம்பி. அடே சொல்ரேன்கேளு ஊருக்குள்ளே கண்ட பேரிட்டேல்லாம் இந்த ராசா சமாசாரத்தை சொல்லிட்டுத் தாண்டா ஓடணம். எல்லாரும் அந்த ராசாவை வெய்யட்டுமே. நமமகிட்டணசாமி நமக்கேதாவது வழியேக்கொடுக்குண்டா. எங்கேயாவதொரு ஊருக்குப்போயி, அங்கே இந்தத்தொழிலெல்லாம் விட்டுட்டு ஏதாவது வெத்திலபாக்குக்கடே, அரிசிக்கடே, வச்சுக்கிட்டு நாம் பொளக்கலாண்டா.

அதி—அத்தாண்ணே சரி.

(இருவரும் மீராபாய் கால்களில் விழுகிறார்கள்)

மீரா—யாரப்பா நீங்களிருவரும்? இங்கெதற்காக இவ்வேளையில் வந்தீர்கள்?

ஏக—அம்மா, தாயே, ஒங்களாலே எங்களுக்கு புண்ணியம் வந்திடுச்சம்மா. நாங்க புதிசாயிட்டோமம்மா. எங்களுக்கு நல்ல வாக்கு சொல்லணமம்மா. எங்களைக் காப்பாத்தணம்மா.

மீரா—என்னப்பா சமாசாரம்? என்னுசீர்வாதமுங்களுக்குப் பரிபூர்ணமாயிருக்கிறது. எழுந்திருங்கள். நீங்கள் வந்த காரணமென்ன?

அதி—அம்மா, மவராசா எங்களே விட்டு ஓங்களே கொல்லச் சொன்னுங்கம்மா.

மீரா—(திடுக்கிட்டு) என்ன! (சற்று பொறுத்து) நீங்களிப் போதென்ன செய்யப் போகிறீர்கள்? என்னைக் கொல்ல வந்திருக்கும் பக்ஷத்தில் ஏன் கொல்லாமல் நிற்கிறீர்கள்? நானிப் புவியிலிருப்பது என் பதிக்குச் சம்மத மில்லாமலிருந்தால் நானிருந்துதானென்ன பிரயோஜனம்? சீக்கிரமே கொன்றுவிடுங்கள்.

ஏக—அம்மா, அப்படிக்கி நீங்க சொல்லலாமா? இந்த லோவத்திலே அம்மாங்க இருந்தாக்கே எத்தனேயோ நல்லதுண்டே. இப்ப நாங்களுக்கமே சாச்சிக்கி. பொறந்தனிக்காரம்பிச்சு கொலேயே செய்திட்டுவந்த நாங்க ஓங்களே பாத்தொடனே, எங்க சொவாவம்லாம் ஓடிடுத்தே. அப்ப நீங்க இருந்தா எத்தனயோ நல்லதுண்டம்மா.

மீரா—கிருஷ்ணு? உனது லீலையை யாரடா அறியக்கூடும்? இக்கொலேயாளிகளே யனுப்ப என் பதியைத் தூண்டுவானேன், இவர்களுக்கிப் புத்தியையும் கொடுப்பானேன்? ஜீவன்களிடத்தி லுனக்கென்ன கருணையப்பா? இவர்களுக்கிப்படி புத்தியைக் கொடுத்து அவர்களே நல்ல வழிகளுக்குக் கொண்டுவர வேற்பாடு செய்திருக்கிருயே, உன்னை நானெப்படிப் புகழ்வது? (அவர்களே நோக்கி) அப்பா, எல்லா மீசன் செயல். நம்மாலாவதென்ன? உங்களுக்கிப் புத்தியை யளித்திருப்பது பகவானுடைய செயலே யல்லாமலெளியேனுன என்னுலென்னவாகும்?

ஏக—அம்மா, நாங்க இந்த ஊரைவிட்டு ஓடிப்போயி வேறே ஊரிலே தப்புத்தண்டா ஒன்றும் இல்லாதே ஏதாவதுஒரு பொளப்பே வச்சுக்கிட்ருக்கப் போறோம். எங்களுக்கு இன்னமே புத்தி கித்தி கெட்டுப்போவாதே ஒரு வளியா சரியா இருக்கறத்துக்கு, அம்மா, நல்ல வார்த்தே சொல்லணம்.

மீரா—எத்தேசத்திலு மெக்காலத்திலு மீசனை நம்பியிருக்கும் பக்ஷத்திலுங்களுக்கு ஒரு குறைவும் வராது. நம்மிட த்திலிருக்கும் கெட்ட குணங்களை யெல்லாம் விலக்கி நற்புத்தியைக் கொடுப்பார். ஆகையால் பகவானைச் சரணமடைந்து அவரையே நம்பியிருங்கள். உங்களுக்கெந் நாளும் சுகமுண்டு.

இருவரும்—அம்மா, நாங்க போறோம். நீங்க இப்ப சொன்னத்தே மறக்கவே மாட்டம்.

(இருவரும் நமஸ்கரித்துப் போகிறார்கள்.)

(காட்சி முடிகிறது.)

(இன்னும் வரும்.)

ஆர். ஸ்ரீனிவாச ஐயர், யம். ஏ.

---

## நன்மொழி

---

### அன்பு செய்வாரையறிவன் சிவன்

இகழ்ந்ததும் பெற்றது மீச னறியு  
மகந்தருள் செய்திடும் உத்தம நாதன்  
கொழுந்தன்பு செய்தருள் கூரவல் லார்க்கு  
மகிழ்ந்தன்பு செய்யு மருளது வாமே.

---

ஆர்வ முடையவர் காண்ப ரரன்றன்னை  
யீர முடையவர் காண்பா ரிணையடி  
பார முடையவர் காண்பார் பவந்தன்னை  
கோர நெருக்கொடு கோங்கு புக்காரே—திருமந்திரம்.

# மிகச்சிறு குழந்தைகளுக்கு பிரஹ்மஞானம்.*

## இரண்டாம் அத்தியாயம்

### கடவுள் பத்ததி (விகாசமுறை).

உலகத்திலுள்ள எல்லாஜனங்களும் என்னசெய்யவேண்டுமென்று கடவுள் விரும்புகிறார்? நேர்த்தியான அவருடையவீட்டில் இவர்களையெல்லாம் எதற்காக வைத்திருக்கிறார்? அவர்கள் எல்லோரும் விகாசக்கிரமத்தில் அதிக அழகும் மேன்மையுள்ளவர்களுமாக வளர்வதற்கே அவர் விரும்புகிறார். அவ்வழகையும் மேன்மையையும் நாம் எவ்வளவு கஷ்டப்பட்டு நினைத்துப் பார்த்தாலும் தெரிந்துகொள்ள முடியாது. உலகத்திலுள்ள ஜனங்களெல்லோரும் எவ்விதமான நிலையை ஒரு காலத்தில் அடையவேண்டுமென்று கடவுள் எண்ணியிருக்கிறாரோ, அந்நிலையை நோக்கியே அவர்கள் வளர்ந்து கொண்டிருக்கிறார்கள். அவ்வளவு அழகான நிலையை அடைவதற்கு நீண்டகாலம் பிடிக்கிறது. அதாவது அநேக ஜன்மங்களாகிறது. ஆகையால் கடவுளால் விரும்பப்படும் நிலையை அவர்கள் அடைவதற்கு முன்பாக பலதடவை இதர உலகங்களுக்குப் போகிறார்கள். பலதரம் இங்கு திரும்பிவருகிறார்கள். அதாவது இறக்கிறார்கள், மறுபடியும் பிறக்கிறார்கள். சில ஜனங்கள் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக அந்நிலையைக் கிட்டியிருக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் இவ்வுலகத்திற்கு அடிக்கடி திரும்பி வந்திருக்கிறார்கள். ஆகையினால் கற்றுக்கொள்வதற்கு நீண்டநாள் சாவகாசம் அவர்களுக்கு இருந்திருக்கும். ஆனால் உலகத்திலுள்ள எல்லா ஜனங்களும் கடவுள் அவர்களை எவ்விதமாக இருக்கவேண்டுமென்று விரும்புகிறாரோ அதை என்றைக்காவது ஒருநாள் அறிந்துகொள்

* Adapted from the "Young Age." London "Theosophy for very Little Children" by C. M. Codd

வார்கள். அப்போது உலகம் அழகியதாகவிருக்கும். ஜனங் களெல்லோரும் சந்தோஷமாக விருப்பார்கள்.

கடவுள் நாம் எப்படி இருக்கவேண்டுமென்று விரும்புகிறாரென்பதை எப்படித் தெரிந்துகொள்வது? நாம் அதை முழுமையும் உடனே தெரிந்துகொள்ளமுடியாது. உடனே அதைப்பற்றிக்கடவுள்நமக்குத்தெரிவிக்க அசாத்யமாயிருக் கும்படி, அவ்வளவு அழகுள்ளதாயிருக்கிறது அவ்விஷயம். ஆகையால் உலகத்தில் நாம் ஒவ்வொருதரம் ஜன்ம மெடுக் கும்போதும் பிரயாசைப்பட்டு அதைத் தெரிந்துகொள்ள ஆரம்பிக்கும்போது அதிக சீக்கிரத்தில் அந்த மாதிரி ஆய் விடவேண்டுமென்றும அவா நமக்கு உண்டாகக் கூடியதாக அது அவ்வளவு அழகுள்ளதாய்க் காணப்படுகிறது. நாம் அப்போது அதற்காக பிரயாசப்படாமலிருக்க முடியாது.

இப்போது ஒரு நிமிஷநேரம் இதைப்பற்றிச் சிந்தித்து நாம் எப்படிபட்டவர்களாயிருக்கவேண்டுமென்பது கட வுளுடைய நோக்கம் என்பதை ஒருசிறிது தெரிந்துகொள் வோம். அவர் (கடவுள்) நோக்கப்படியே நடக்கிறவர் களான மனிதர்களெல்லாரையும் பற்றிக் கவனிப்போம். அவர்கள் தைரியசாலிகளாகவும், பக்ஷமுள்ளவர்களாகவும், அன்புள்ளவர்களாகவுமிருக்கின்றனர். கடவுள் மிகுந்த தை ரியஸ்தர், அவருடைய அழகியஉலகத்தில் ஏற்பட்டிருக்கிற துக்ககரமான சகல விஷயங்களையும் பொறுத்துக்கொள் ளக்கூடிய அவ்வளவு திடமுள்ளவராக இருக்கிறார். காலக் கிரமத்தில் எல்லாம்சீர்திருத்தமாகிவிடுமென்று அவருக்குத் தெரியும். மகாபுத்திசாலியாகையால் அவரேதான் இவ் வொழுங்குகளை யெல்லாம் ஏற்படுத்தியிருக்கிறார். அவர் ஏற்படுத்தியிருக்கும் ஒழுங்கில் ஜனங்கள் நடப்பதற்கு அவர்களுக்கு எப்படி ஒத்தாசை செய்கிறதென்று அவர்க் குத் தெரியும். அவர் மிகுந்த அன்பு நிறைந்தவராகவுமிரு க்கிறார். தாய்மார்கள் தம் குழந்தைகளை நேசிப்பதைக் காட்

டிலும் அதிகமாகத் தன்னுடைய உலகத்திலுள்ள எல்லா ஜனங்களையும் அவர் நேசிக்கிறார்; அவர்கள் கஷ்டப்படுகிற பொழுதும் சிரமஸ்திதியிலிருக்கிறபொழுதும் அவர் அதிகமாக அவர்களை நேசிக்கிறார். ஏனெனில் அவர்கள் எவ்வளவு மேன்மையுள்ளவர்களாக ஒரு காலத்திலிருப்பார்களென்றும் எந்தக் கஷ்டமும் அவர்களைப் பாதிக்காதென்றும் அவருக்குத் தெரியும். ஜனங்களின் இருதயம் அவருக்கு உரித்தான இடம். துன்பத்திற்கு அவ்விடத்தில் இடங் கொடுக்கப்பட்டாலொழிய அதனால் பாதிக்க முடியாது நீங்களெல்லோரும் "தைரியஸ்தர்களாகவும், புத்திசாலிகளாகவும், அன்புள்ளவர்களாகவும் ஆக வேண்டுமென்று நான் விரும்புகிறேன்" என்று கடவுள் சொல்லுகிறார். அந்தப்படியிருக்க உலகத்திலுள்ள எல்லா ஜனங்களும் கற்றுக்கொண்டு வருகிறார்கள். நீங்கள் கற்றுக்கொள்வதைப் போல உங்கள் தாய் தகப்பன்மாருங் கூட கற்க முயன்று கொண்டிருக்கிறார்கள். கடவுள் தங்களைச் செய்யச் சொல்லுவது இன்னதென்று அவர்களுக்குச் சில சமயங்களில் தெரிகிறதில்லை. அதைக் கண்டுபிடிக்க அவர்கள் முயலுகிறார்கள். அது மிகக் கஷ்டமாக விருந்தால் அதைரியப் படாதே, மறுபடியும் முயற்சிசெய், அதைக்கண்டுபிடிப்பதற்கு அடுத்த தடவை உன்னால் முடியும், என்று கடவுள் அவர்களுக்கு அப்போது சொல்லுகிறார்.

நாம் அதைக் கண்டுபிடிப்பதற்கு முயலுகிறோமல்லவா? நாம் அதைப்பற்றி ஆராய்வோம். கடவுள் நம்மைத் தைரியஸ்தர்களாக்க விரும்புகிறார். அந்த வழியில் அவரைப் போல இருப்பதற்கு நாம் எவ்விதமாக முயற்சிசெய்ய வேண்டும்? இருக்கட்டும். நாம் கீழேவிழுந்து நம்மைக் காயப்படுத்திக் கொள்ளும்பொழுது அழாமலிருக்க நம்மால் கூடியவரை முயற்சிக்கவேண்டும். நம்மால் கூடியவரை உண்மையையே பேச நாம் தைரியமாக முயலவேண்டும். என்ன நேரிடுமோவென்று பயப்பட்டு அதற்காக ஒன்றை

யும் மறைத்துப் பேசக்கூடாது. நம்மால் செய்கிறதற்கு சிறிது கடினமாயுள்ளவைகளை நாம் செய்ய முயன்று அதில் நாம் ஜயமடையும் வரை விடாது முயற்சியுடனிருக்கவேண்டும். அவ்விதம் செய்து வருவோமேயானால் நாம் கடவுளைப்போலத் தைரியமாக இருக்கக் கற்றுக்கொண்டுவிடுவோம். செவிலித்தாய் தனக்கு ஒத்தாசை செய்யும்படி நம்மைக் கேட்கும் பொழுது நாம் செய்ய விரும்புகிறோமில்லை. ஏனெனில் வேறு எதையோ ஒன்றைச் செய்ய விரும்புகிறோம். அப்படிக்கிராமல் நாம் விரும்புவதை விட்டுவிட்டு அவளுக்கு உதவிசெய்ய முயலவேண்டும். அது தான் தைரியத்தின் லக்ஷணம். எதற்கும் நாம் பயப்படாமலிருக்கவும் முயலவேண்டும். யாராவது ஒரு புதிய மனிதன் வருகிறதைக் கண்டால் நாம் ஓடவேண்டியதில்லை. உன்னைப்போல அவரும் கடவுளுடைய ஜனங்களிலொருவரென்பதை நீ அறிகிறாய். எனெனில் அவரும் கடவுளுடைய வீட்டில் தான் வசிக்கிறார். அவரைக்கண்டு நீ பயப்படவேண்டியதில்லை.

கடவுள் இருப்பதைப்போல புத்திமானாயிருக்கக் கற்றுக்கொள்வதற்கு நாம் எப்படி முயலவேண்டும்? நாம் அன்புள்ளவர்களாயிருந்தாலொழிய புத்திமானாக இருக்கமுடியாது: ஆகையினால் நாம் புத்திமான்களாக இருக்கவேண்டுமானால் எப்பொழுதும் அன்புள்ளவர்களாக இருக்கவும் உலகத்திலுள்ள மற்ற ஜனங்களுக்கு நம்மால் கூடிய வரை ஒத்தாசை செய்யவும் நாம் முயலவேண்டும். உலகத்திலுள்ள எல்லா ஜனங்களுக்கும் ஒத்தாசை செய்வதற்குரிய நல்ல வழி உனக்குத் தெரியுமா? அவர்களிடம் அன்பாயிருப்பது தான். அதைத் தவிர வேறு வழியில்லை. நீ நேசிக்கிறதை அவர்கள் அறிந்துகொண்டாலுஞ் சரி, அறியாவிட்டாலுஞ் சரி அதனால் பாதகமில்லை. நீ அவர்களை நேசிப்பதற்காக அவர்கள் சந்தோஷமடைந்து அதற்குப் பிரதியாக அவர்கள் உன்னை நேசித்தாலும் சரி, நேசிக்கா

விட்டாலுஞ் சரி, நீ சிறிதும் அதைக்குறித்துக் கவலைப்பட வேண்டியதில்லை. யாராவது ஒருவர் உன்னை வைதாலுஞ்சரி, உன்னிடம் பக்ஷமின்றியிருந்தாலுஞ் சரி, அவர்களிடத்தில் நீ கோபங்கொள்ளாமலிருக்க முயலவேண்டும். ஒரு வேளை வேறொருவர் அவர்களைக் கொடுமையாக நடத்தியிருக்கலாம். அதனால் அவர்கள் கோபமாக இருந்திருக்கக்கூடும். அவ்விதம் கோபமாக இருந்ததால் கடுமையான வார்த்தைகளை உன்னிடம் உபயோகித்திருப்பார்கள். வேண்டுமென்று அப்படிச் செய்திருக்கமாட்டார்களென்றும் ஆயாசமாகவாவது கோபமாகவாவது இருந்த நிமித்தம் அப்படிச் செய்தார்களென்றும் நீ நினைக்கவேண்டும். அதிகமாகக் களைப்படைந்த ஜனங்கள் எத்துணையோ இருக்கிறார்களென்பதைக் கவனி. அவர்கள் ஒவ்வொருநாளும் அதிக கஷ்டமான வேலையைச் செய்யவேண்டியிருக்கிறது. அதனால் அவர்கள் அநேக துன்பங்களை யடைந்து சில சமயங்களில் துக்கப்படுகின்றனர். நம்மைப்போல அழகான வீட்டைப் பெற்றிராதவர்கள் அல்லது நம்மைப் போல அநேக விஷயங்களை அறிந்திராதவர்கள் அல்லது நம்மைப்போலத் தாய் தகப்பன் சகோதரர் சகோதரி முதலியவர்களை அடைந்திராதவர்கள், அல்லது வியாதிஸ்தர்களாயுள்ளவர்கள், அல்லது விசனமுள்ளவர்கள் ஆகிய இப்படிப்பட்ட மனிதர்களைப் பார்த்தால் நாம் அவர்களிடம் அதிக அன்புள்ளவர்களாயிருப்போம் அவர்களுக்கு ஏற்பட்ட குறைகளை நீக்க நம்மால் முடியாவிட்டாலும் அவர்களைப்பற்றி நாம் சில சமயங்களில் நினைத்து நம்முடைய மனப்பூர்வமான அன்பை அவர்களிடம் செலுத்தக்கூடும். அதுவும் கூட அவர்களுக்கு ஒத்தாசை செய்யும் என்பது உங்களுக்குத் தெரியும். நீங்கள் அப்படிச் செய்யும்பொழுது உங்களுடைய இருதயத்திலிருந்து உண்டான அன்பானது அழகிய ஒரு பக்ஷியைப்போல கடவுளிடத்திற்குப் பறந்து செல்லுகிறது. கடவுள் அதை அவர்களிடம் திருப்பியனுப்புகிறார். அவ்விதம் கடவுளால் திருப்பி அனுப்பப்பட்ட

அன்பானது அப்படிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறவர்களுக்கு இவ்வுலகத்தில் சிறிது சந்தோஷத்தை விளைவிக்கிறது.

உலகத்தில் சந்தோஷமும் அழகும் பொருந்திய வஸ்துக்கள் எவ்வளவிருக்கின்றன. ஆ! அவைகளை நேசிப்பது எவ்வளவு சுலபம்! அவைகளைப்பற்றி நாம் நினைத்துப்பார்ப்போம். தாயார், தகப்பனார், சுதர்மன், சுந்தரம், சின்னப்பாப்பா, சிங்காரம், அழகிய பூனைக்குட்டி, வெளியில் அங்குமிங்கும் பறந்து திரிகின்ற பக்ஷிகள், குழி முயல்கள், புஷ்பங்கள், தோட்டத்திலுள்ள சிறிய மரங்கள், ஐவரளிப்புஷ்பங்கள், இன்னும் நம்மால் கணக்கிட முடியாத அநேக வஸ்துக்களிருக்கின்றன. அவைகளை ஒவ்வொன்றாக உங்களுக்குச் சொல்லிக்கொண்டே வந்தேனானால் அதற்கு முடிவிருக்குமென்று நான் நினைக்கவில்லை.

உங்களுக்கு விநோதமாகத் தோன்றும் விஷயங்களைக் குறித்து ஒருபோதும் நீங்கள் பரிகாசம் செய்யக்கூடாது. அதிலும் முக்கியமாக ஒரு மனிதனை எடுத்துக்கொள்வோம். அவன் நூதன வழக்கமுள்ளவனாகக் காணப்படுகிறான். நீங்கள் அப்படிப்பட்ட மனிதர்களை இது வரையில் பார்த்ததில்லை. அதற்காக அவனை நீங்கள் பரிகசிக்கக்கூடாது. அவன் உங்களைப் பார்க்கும் பொழுது அவனுக்கும் அதேமாதிரிதானிருக்கும். உன்னைப்போல அவனும் கடவுளுடைய மனிதனென்று நீங்களறிவீர்கள் உங்களுக்கு எதைக்கற்பித்திருக்கிறாரோ அவைகளல்லாத வேறு விஷயங்களைக் கடவுள் அவனுக்குப்போதித்திருப்பதால் அவன் பரிகசிக்கப்படதக்கவனாக உங்களுக்குக் காணப்படுகிறான். ஞாயிற்றுக்கிழமைகளில் நீங்கள் போகிற கோவில்களல்லாத வேறு ஆலயங்களுக்குப் போகிற ஜனங்களும் உங்களைப்போலவே கடவுளைப்பற்றி அவ்வளவு தெரிந்துகொண்டிருப்பார்களென்பது முக்கியமாக உங்களுக்கு ஞாபகத்திலிருக்கவேண்டும். நம்மைப்போல்

நடை உடை பாவனைகளில்லாதவர்களும் அதிக தூரத்திற் கப்பால் பலதேசங்களிலிருக்கிறவர்களுமான ஜனங்களையும் பற்றி அவ்விதமே எண்ணவேண்டும். எல்லா உண்மையான பிரார்த்தனைகளும் கடவுளைப்போய் அடைகின்றன. சில இடங்களில் அவரை வேறு பெயரால் அழைக்கிறார்கள். இங்கு செய்வதைப்போலல்லாமல் வேறுவிதமாக அவரைப் புகழ்ந்து பாடுகிறார்கள். துதிக்கிறார்கள். கடவுளுக்கு அதனால் யாதொரு வித்யாசமும் இல்லை: தன்னைப்பற்றி எல்லோரும் புகழ்ந்து பாடுவதைக் கேட்பதற்கு அவர் விருப்பமுள்ளவராக இருக்கிறார். "அவர்கள் நடக்கிற எல்லா வழிகளும் என்னுடைய வழிகளே" என்று அவர் சொல்லியிருக்கிறார். அவர்களால் கூடுமானவரை சந்தோஷமாயிருக்க வேண்டுமென்பதே அவர் (கடவுள்) விருப்பம். உலகத்திலுள்ள எல்லா வஸ்துக்களைக்காட்டிலும் மேலாக நீங்கள் இருக்கவேண்டுமென்பதைத் தான் கடவுள் நினைக்கிறார். உங்கள் வாழ்நாள் முழுவதும் அதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். உலகத்திலுள்ள சகல ஜனங்களையும் கடவுள் நேசிக்கிறாரென்பதையும் உலகத்தில் ஏற்பட்டுள்ள பல மார்க்கங்களும் (கடைசியில்) ஒன்றே என்பதையும், தன் குழந்தைகள், பெரியவர்கள், சிறியவர்கள் ஆகிய எல்லோரும் சந்தோஷமாயிருக்கவேண்டுமென்னும் ஒரு விருப்பத்தைத் தவிர அவர் வேறொன்றையும் விரும்பவில்லை என்பதையும் நீங்கள் ஞாபகத்தில் வைத்து நடப்பீர்களானால் அப்போது கடவுளைப்போல நீங்களும் ஒரு சிறிது புத்திசாலிகளாக இருக்க ஆரம்பிப்பீர்கள்.

பி. குமரப்ப செட்டி.

205

# குருக்களும் சிஷ்யர்களும். *

(152-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

குருநாதர் தம் சிஷ்யனின் சரீரத்தை முன் கூறியபடி உபயோகிப்பதற்கும் பூத பிரேத பிசாசங்கள் மநுஷ்ய சரீரங்களை உபயோகிப்பதற்கும் ஏராளமான வித்தியாஸம் உள்ளது. பின்னது தகாதது என்று பலதரம் இகழ்ந்திருக்கிறோம். உதாரணமாக ஸ்ரீபெஸண்ட் அம்மையார் மூலமாய் நமது குருநாதர்கள் பல சந்தர்ப்பங்களில் பேசியிருக்கிறார்கள். அச்சமயங்களில், அம்மையாருடைய குரலும் பேசும் தோரணையும், முகக்குறிகளுங்கூட மாறியிருந்தனவாகக் கேள்வியுற்றிருக்கிறேன். ஆனால் அச்சமயங்களிலெல்லாம் தம்முள் ஆவேசித்திருப்பவர் இன்னாரென்றும் இன்னகாரணத்தை முன்னிட்டு இன்னது உரைக்கிறாரென்றும் அறிந்து பூர்ண பிரக்ஞையுடனே இருந்திருக்கிறார். பிரேதாதிகளின் ஆவேசத்திற்குட்பட்டவர்களிடம் சொந்த பிரக்ஞையானது மங்கிப் போகின்றது. குருநாதர் சிஷ்யனுடைய சரீரத்தை உபயோகிப்பதில் யாதொரு தோஷமுமில்லையாயினும் சில சிஷ்யர்கள் விஷயத்தில் மட்டுந்தான் இவ்வித ஆவேசம் நடந்திருக்கிறது.

இவ்வித ஸம்பவங்களில் அம்மையாரவர்களுடைய பிரக்ஞையானது தமது ஸ்தூல சரீரத்தின் மூளையில் எப்போதும் போலவே ஸ்திரமாயிருந்தாலும், தமது பிரயத்தனத்தால் பேசாமல், குருநாதரே தமது வாக்கை உபயோகிக்க, தாம் சும்மா மட்டும் இருந்து கேட்பது வழக்கம், குருநாதர் தம்சொந்த மூளையை உபயோகித்தே தொகுத்த வாக்கியங்களை அம்மையாரவர்களுடைய மூளையில் பதிய வைக்கிறார். இச்சமயங்களில் அம்மையாரவர்கள் தமதுமூளையைச்சுயமாகவே வைத்துக்கொண்டு குருநாதர் வாக்யங்களை உள்ளுணர்வாய்க் கூர்ந்து கவனித்துக் கேட்கவும், அதையறியவும், ஆனந்திக்கவும் மட்டும் செய்கிறார். ஆனால் அதே

---

* பி. எஸ். ராமசுப்பையரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

காலத்தில் தமது மூளையை, வேறுவிஷயமாக ஒரு வாக்யங்கூட கல்பனை செய்வதற்குபயோகிக்கக்கூடும் என்று நினைக்க இடமில்லை, பிரேத ஆவேசம் இதையொத்திருப்பது அசாத்யம். அநேகமாய்ப் பிரேதங்களிடத்து அகப்பட்டவர் ஸ்வாதீனம் இழந்து பிறர் வசப்பட்டவர்களாகவே போய் விடுவது தான் வழக்கமாயிருக்கிறது.

மஹாத்மாவின் ஆவேசத்தால் விளங்கக்கூடிய அளவிறந்த சக்தியானது, ஸாதாரணமாய்ச் சற்று நுண்மையான மனத்தோடு கூடியவர் எவர்க்கும் எளிதிற் புலப்படும். சிஷ்யன் பேசுகையிலே, குருநாதரின் தோற்றத்தையும் ரூபத்தையுங்கூடக் காணலாம். குருநாதருடைய குரலைக்கூட கேட்கலாம். ஆனால் ஒவ்வொருவகையிலும் நமது தூலக் கண்ணுக்குக்கூடத் தெரியும்படி அவ்வளவு தெளிவாய் மாறுதல்கள் ஏற்படா; பிரேத ஆவேசங்களுக்குட்பட்டவனுக்கோ, அவன் குரல் முற்றும் மாறுபாடடைகின்றது. அவன் சாடை மாடைகளும் ஏராளமான மாறுதல்களடைகின்றன. அது ஏனென்றால் பிரேதமானது தனக்குட்பட்டவனை எல்லா விஷயங்களிலும் கட்டுப்படுத்தி சுதந்திரமற்றவனாகச் செய்கிறது. மஹான்களோ, சிஷ்யர்களுக்கு வேண்டிய சுதந்திரத்தைக் கொடுத்தேயவர்களைப்பழக்குகிறார்கள்.

இந்த சிஷ்யக்கிரமத்தில் இன்னொரு மூன்றாவது படியுமுண்டு. இதில் குரு சிஷ்யர்களுக்குள் இன்னும் அதிகமாய் நெருங்கின ஸம்பந்தம் நிகழும். இதில் சிஷ்யன் குருநாதருடைய "சற்புத்திரன்" என்றழைக்கப்பெறுவான். வெகுகாலமாய் இதற்குமுற்படியில் சிஷ்யன் இருந்து பழகி, தாம் தடைசெய்ய நேரும்படியான எந்த எண்ணமும் இச்சையும் சிஷ்யனிடத்தில் எழாவென்று நிச்சயங்கொண்ட பிறகே, குருக்கள் இம்முறையிற் சேர்த்துக்கொள்வார். இதுதான் குருநாதரின் "ஸத் புத்திரனுக்கும்" சிஷ்

யனுக்கும் உள்ள வித்தியாஸம். சிஷ்யனானவன் குருநாதர் பிரக்ஞையிற் கலந்த ஓர் அங்கத்தினனாயிருந்தாலும், அவசியமான சந்தர்ப்பங்களில் அவனைச்சற்று ஒதுக்கியே வைக்கவேண்டியும் நேரும். ஆனால் "ஸத் புத்ரனையோ" எப்போதும் அதிக உறவான ஸம்பந்தத்திலேயே நடத்திவருவார். அவனை ஒரு கணமும் ஒதுக்கிவைப்பதற்கு குருநாதர் சக்தியுங்கூட இயலாதென்று சொல்லும்படி அத்தன்மையான கௌரவம் வாய்ந்தது இப்பதவி.

ஆகவே குருநாதர்களுக்கு சிஷ்யர்கள் மூன்றுவித முறைமைகளில் உள்ளார். முதற்படியிலுள்ளோர்களை சிஷ்யர்கள் என்றுகூட அழைத்தல் ஒண்ணாது. இரண்டாம் படியில் சிஷ்யர்களாக அங்கீகரிக்கப்படுகிறார்கள். மூன்றாம் படியில் தான் "ஸற்புத்திரன்" என்ற பெயர் பெறுகிறார்கள். இந்த மூன்று படிகளுக்கும் மோக்ஷமார்க்கத்தில் ஏற்படுகின்ற தீக்ஷைமுறைகளுக்கும் சம்பந்தம் கொஞ்சமுமில்லையென்று நீங்கள் நன்குணர்க. அவைகளின் முறை வேறு. அவைகள் குருநாதரால் அளிக்கத்தக்கனவல்ல. வெள்ளியம்பலம் என்ற ஞானியர் ஸபையிலும் அதன் பரமகுருவிடத்தும் சிஷ்யனுடைய முறைமை எவ்விதம் உளதோ, அதற்குத் தக்கபடிதான் சீஷன் தீக்ஷைகள் பெற முயலுவான். இதற்கு நேரான ஓர் உதாரணம் என்னவெனில்:—ஒரு காலேஜில் படிக்கும் பிள்ளையை எடுத்துக்கொள்வோம். அவன் யாதொரு பட்டமும் பெறுவதற்கு முன் அவனுடைய காலேஜ் தலைவரிடத்தும், ஸர்வ கலாசாலை அல்லது யூனிவேர்ஸிடித் தலைவரிடத்தும் அவனுக்குள்ள முறைமையைச்சற்று விசாரிப்போம். யூனிவேர்ஸிடியார் சில பரீக்ஷைகளில் பிள்ளைகள் தேரவேண்டுமென்று விதிக்கிறார்கள். பற்பல பையன்கள் எந்தெந்த முறையாய்ப் பயின்று வந்திருக்கிறார்கள் என்பது அவர்கட்குப் பொருட்டல்ல. பரீக்ஷை ஏற்படுத்துகிறவர்கள் யூனிவர் ஸிடியாரேயொழிய, பள்ளிக்கூடத்

தலைவர்கள் அல்லர். பள்ளிக்கூடத்தாரின் வேலை பிள்ளைகளை பரீக்ஷைகளுக்குத் தகுதியாய்ச் செய்வது மட்டுந்தான். அப்படி பயிலுவித்தலில் உபாத்யாயர் பிள்ளைகளுடன் எப்படி எப்படிப் பழகுவது உத்தமம் என்று கருதி, எவ்விதம் நடந்துகொள்வாரோ அதுவும் யூனிவர்ஸிட்டியாருக்குக் குறிப்பல்ல.

அதே மாதிரி குரு சிஷ்ய ஸம்பந்தத்திற்கும், வெள்ளியம்பலத்திற்கும் யாதொரு வகையிலும் முறைமை கிடையாது. சிஷ்யனைப் பழக்குவது பூர்ணமாய் குருவைப் பொறுத்ததேயாகும். அது குருவின் சொந்த அபிப்ராயப்படியே இருக்கும். எச்சமயம் தம் சிஷ்யருள் ஒருவர் தீக்ஷை பெறத் தகுதியுள்ளவரென்று குருநாதர் கருதுகிறாரோ, அச்சமயம் அவ்விஷயத்தை வெள்ளியம்பலத்தார்க்கு அறிவிக்கிறார். அவனை தீக்ஷை பெறுமாறு அனுப்புகிறார். அப்போது வெள்ளியம்பலத்தார் அவன் தீக்ஷைக்குத் தயாராயிருக்கிறானா என்று மட்டும் கேட்கிறார்களேயொழிய, குருநாதருக்கும் அவனுக்கும் எவ்வித முறைமை நிகழ்ந்தது என்று கேட்பதேயில்லை. ஆயினும், தீக்ஷை பெறவிருக்கும் சிஷ்யன் குருநாதர் பிரேரணையைத் தவிர வெள்ளியம்பலத்தில் உயர்ந்த படியிலுள்ள இருவர்களாலும் (அதாவது முக்தர் இருவராலும்) ஆமோதிக்கப்படவேண்டியது உண்மையே. நான் முன்னரே கூறியுள்ளபடி சிஷ்யன் வேறு தாம் வேறு என்ற வேற்றுமையுணர்வில்லாமல், குருநாதர் ஏகிபாவம் பெற்று, அச்சீடன் தீக்ஷை பெறுதற்குத் தகுதியுள்ளவன் தான் என்று நிச்சயபுத்தி கொண்டால் மட்டுமே தீக்ஷைக்கு அனுப்புவாரென்பது திண்ணம்.

இதையெல்லாம் கேட்டும் மாணவனுக்கு இயற்கையாய் ஓர் சமுசயம் பிறக்கலாம். “நான் ஒரு மஹாத்மாவின் சிஷ்யனாவதெப்படி?” அவர் என்னைக் கவனிப்பதற்கு நான் செய்யவேண்டியதென்ன? என்று பலர் கேட்கலாம். நாம்

அவரை வசப்படுத்தவேண்டுமென்று பிரயத்நங்கள் செய்ய வேண்டியது உண்மையாகவே அநாவசியம். குருநாதர்களே, தாம் செய்து முடிக்கவேண்டிய பெருங் கைங்கர்யத்திற்கு சாதகமாக, எவரெவர்களைத் தேர்ந்தெடுத்துப் பழக்கலாமென்று கவனித்தவண்ணமாயிருக்கிறார்களாகையால், நம்மைக் கவனியாது கைவிடுவார்களென்ற பயம் கொஞ்சமும் வேண்டாம்.

இருபத்தைந்து வருஷங்கட்கு முன் மஹான்களுடைய ஸங்கம் முதன்முதல் எனக்கேற்பட்ட காலத்தில் நடந்த ஓர் ஸம்பவம் இப்போது நன்றாய் ஞாபகத்திற்கு வருகின்றது. நானறிந்த ஒருவர், எனக்குத் தெரிந்தமட்டில் இத்தால வுலகில் மிகுந்த பக்திமானாகவும் மஹா பரிசுத்தரான குணசீலராகவும் மஹாத்மாக்களிடத்தில் பூர்ண விசுவாஸமுடையவராகவும், அவர்களுடைய சிஷ்யனாக வேண்டுமென்ற ஓரே நோக்கத்தை மேற்கொண்டு, அதற்கே தம்மைத் தகுதியுள்ளவராக்கிக் கொள்ளும் பொருட்டு தம் வாழ்நாளைக் கழிப்பவராகவும் இருந்தார்.

அவர் என்னைக் காட்டிலும் பல வழிகளில் சிஷ்யபாதலுக்கு யோக்யர் என்றே எனது புத்திக்குப் புலப்பட்டது. அவர் என் சிஷ்யராக அங்கீகரிக்கப் படவில்லை என்பதற்கு நியாயம் ஒன்றும் எனக்குப் புலப்படவில்லை. நான் இவ்வழிகளிற் புதியவனானதால் எனது அறிவீனத்தால் ஒரு நற்சமயம் நேர்ந்தபோது, குருநாதரிடம் மிகத் தாழ்மையாய் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, என் நண்பர் பெயரைச் சொல்லி 'அவர் நல்ல சிஷ்யராவரே' என்று மெதுவாய்ச் சொன்னேன். அன்பினாலும் வியப்பினாலும் அவரது முகம் புன்சிரிப்போடு கூடி விளங்கியது. உடனே, பின் வருமாறு சொன்னார்.—

"உன் ஸ்நேகிதரை அலக்ஷ்யம் செய்து விடுவோமென்று நீ பயப்படவேண்டாம். ஒருவரையும் ஒருபோதும் கவனிக்கத் தவறவே மாட்டோம். ஆனால் இவ்விஷயத்தில் அற்றுப்போகவேண்டிய கர்மசேஷம் ஒன்று இருக்கிறபடியால், தற்சமயம் உன் யோசனையை ஏற்றுக்கொள்வது அஸாத்தியமாயிருக்கிறது. சீக்கிரம் உன் நண்பர் இத்தூல வுலகை விட்டு நீங்கும்படி நேரும். பிறகு சீக்கிரமும் இத்தூல வுலகத்திற்குத் திரும்புவார். அப்போது அக் கர்மசேஷம் நீங்கும். நீ சொல்லும் யோசனை அப்போது தான் நிறைவேறக்கூடும்."

பிறகு, சுபாவமான பரமசாந்த குணத்தோடும் பிரியத்தோடும் எனது பிரக்ஞையைத் தம் சொந்தப் பிரக்ஞையோடு சேர்த்துக் கொண்டவராய், அதியுன்னதமான ஓர் பிரக்ஞாபூமியினின்று, குருக்கள் உலகத்தைக் கண்ணோக்கும் முறையைக் காட்டினார். அச்சமயம் நான் சற்றேனும் எட்டமுடியாத அதிஉயர்ந்த ஓர் பிரக்ஞாபூமிக்கு என்னை அவர் கொண்டுபோக வேண்டியிருந்தபடியால், எனது பிரக்ஞையை அவருடையதோடு சேர்த்து அணைத்துக்கொண்டார். அவ்வுன்னத பதவியிலிருந்து பார்க்கும்போது, பூலோகத்திலுள்ள லக்ஷக்கணக்கான ஜீவர்களில் பெரும்பான்மையோர்கள் அபக்குவிகளாயிருந்தமையால், பிரகாசமாய் விளங்காமலே, மங்கலாய்த் தோன்றினார்கள். ஆயினும் குருநாதர்கள் உபயோகிக்கக்கூடிய பக்குவதசைக்கு சிஷ்யர்கள் வெகு தூரத்திற் கப்பால் வருபவர்களாயிருந்தாலுங்கூட, ஒரிருண்ட இரவில் அதிதூரத்திலுள்ள விளக்கு மற்றவைகளைவிட எவ்வளவு பிரகாசமாய் நிற்குமோ, அவ்வளவு பிரகாசமாய் அந்த ஜீவர்கள் அவ்வுன்னத பிரக்ஞாபூமியினின்று பார்க்கும்போது, நமக்கு வியக்தமாய்ப் புலப்படுகிறார்கள்.

(இன்னும் வரும்)

லெட்பீடர்.

# பிராசீன சமயாசாரங்களும் தற்கால அவசியங்களும்.

---

சென்ற ஐம்பது வருஷங்களுக்குளிவ்வுலகில் அறிவின் கோசரம் மிகவும் மாறுபட்டுக் கொண்டேயிருக்கிறது இம் மாறுபாட்டின் காரணம் தற்கால பிரகிருதி சாஸ்திரமேயாகும். டார்வின் (Darwin) என்றமஹாசாஸ்திரக்ஞாலேற்படுத்தப்பட்டுள்ள பிரகிருதி விகாசமுறையை சம்பந்தித்த கொள்கை (Theory of Evolution) எல்லா மதஸ்தர்களின் ஆத்மிக அபிப்ராயங்களில் தாக்கி அவைகளை சஞ்சலிக்கச் செய்தது. அநேகர் நிரீச்வரவாதிகளாகவும், ஆத்மிக விஷயங்களை சந்தேகிப்பவர்களுமானார்கள். சிலர் இப்போதும் பழைய கொள்கைகளைக் கொண்டு திருப்தியடைவதாயிருந்தாலும் பெரும்பான்மையோர் சஞ்சலப்பட்ட மனதுள்ளவர்களாகவே இருக்கிறார்கள். பிராசீன மதக்கொள்கைகளையும் தற்கால பிரகிருதி சாஸ்திரத்தின் கொள்கைகளையும் ஸமரஸப் படுத்துவது வெகு கஷ்டமாகத் தானிருக்கிறது. இக்காலத்திலிந்தியாவில் மதத்தையெப்படி தினசரி நடபடிக்கைகளில் உபயோகிப்பது என்பதை நன்கு விளக்கிக் காட்டக்கூடிய அநேகவித்வான்கள் தோன்றவேண்டியதவசியம், மஹா தத்வக்ஞானிகளும் பக்தர்களும்கூட அவ்வளவு அவசியமாகமாட்டார்கள். கிருஸ்தவர்கள் தாங்களீசன் கிருபையை சம்பாதித்து எப்போதும் அழிவில்லாமல் ஸ்வர்க்கத்தில் வசிக்கவேண்டுமென்றே உழைக்கிறார்கள். எல்லா தபஸ்விகளுமிப்படி ஸ்வர்க்கத்திற்குப்போய் ஈசனுடைய ஸாந்நித்யத்தை யனுபவித்துக்கொண்டிருப்பதாயிருந்தால் சாதாரணமாக உலகில் தத்தளித்துக் கொண்டிருக்கும் பாமர ஜனங்களின் கதியென்ன? அவர்களெப்போதும் நரகத்திற் கிடந்துருகவேண்டியது தானே?

ஆகையால் பச்சிமதேசத்து தற்கால பிரகிருதி சாஸ்திரத்தின் நோக்கத்தையும் பழய சமயங்களின் நோக்கத்தையும் ஸமரஸப்படுத்துவது வெகு கஷ்டமாகவிருக்கிறது. லௌகிக சாஸ்திரக்ஞனாக நின்று அதே சமயத்தில் ஆத்மக்ஞான மார்க்கத்தில் முயன்றுகொண்டு ஈச்வர பக்தராகவுமிருக்க முடியுமோ? முடியும். பிரஹ்ம வித்யை (Theosophy) அதற்கு வழியைக் காட்டுகிறது. அது பழய சமயாசாரங்களின் தாத்பரியங்களை நவீன நடையில் தெளிவாயெடுத்துச் சொல்லுகிறது. ஹிந்து மத கிரந்தங்களான உபநிஷத்திலாவது, பிராசீன கிருஸ்தவ யோகிகளினுபதேசங்களிலாவது, அல்லது இன்னும் மற்ற பிரபலமான மதங்களிலாவது இல்லாத புதிதான விஷயங்களையொன்றும் அது எடுத்துச் சொல்வதில்லை. ஆனாலிவ்விஷயங்களை தற்காலத்து நோக்கத்துக்குத் தகுந்தபடி எடுத்துரைக்கிறது. ஆத்மிக சாஸ்திரத்தின்படி நாம் காணுமிவ்வுலகம் பொய், கவனிக்கத்தக்கதல்ல, பிரகிருதி சாஸ்திரத்திற்கோ இவ்வுலகம் தான் சகலமும், இதைத்தவிர கவனிக்கவேண்டியது யாதொன்றுமில்லை. பிரஹ்ம வித்யை ஈதிரண்டையுமொருங்கு சேர்த்து ஸமரஸப்படுத்துகிறது.

நாம் காணும் ஜீவபூதவிகாசமுறையானது பிரகிருதி சாஸ்திரக்ஞர்கள் நினைப்பதுபோல் சைதந்யமற்று அறிவில்லாயந்திரம்போல் நிகழ்வதில்லை, ஒரு ஈச்வர சைதந்ய மிதற்கு ஆதாரமாக விருக்கிறது என்று பிரஹ்மக்ஞானம் சொல்லுகிறது. பிரக்ஞையில்லா அணுக்கள் பற்பல சேர்ந்து இவ்வுலகை அமைப்பதில்லை, இவற்றிற்கெல்லாம் பின் நிற்குமொரு மஹா புருஷனினிச்சைப்படி எல்லாம் நடந்தேறுகிறது. ஒரு யுத்தகளத்தில் சேனாதிபதி எங்ஙனம் தான் தீர்மானப்படுத்தியுள்ளதுபோல் போரை நடத்துகிறானோ, அங்ஙனமே இவ்வுலகிலும் ஈசன் தன்னிச்சைக்குத் தகுந்தபடி உலகத்தை நடத்துகிறார். அவரவ்விதம் செய்வதற்கு

கருவிகள் நாமே. அவர் இச்சை நிறைவேறுவதற்கு நாம் அவசியம் வேண்டும். ஈசுவானும் ஜீவனும் ஒற்றுமையாய் நின்று நிறைவேற்ற வேண்டியதே ஜீவபூதவிகாசம். இதை யொருவனறியும் பக்ஷத்தில் தனக்கிவ்வுலகிலேற்பட்டுள்ள கடமை என்னவென்பதை நன்கறிவான். ஏதோ ஒரு ஈசுவானின் நிச்சயமில்லாத ஆக்ஞைக்குக் கீழ்ப்பட்டு நிற்க வேண்டிய அடிமை தானல்ல வென்பதையும், தன்னுடைய ஸ்வேச்சையைக் கொண்டு ஈசுவரனுக்கு ஸகாவாக நின்று அவனது கைங்கரியங்களைச் செய்ய வேண்டியதே தன் கடமையென்பதையும் அவனறிவான். உலகமுழுவதும் மேன்மேலும் அநுபவங்களை யடைந்து விகாசப்பட்டுக் கொண்டே யிருக்கிறது. உலகத்தில் நிறைவேறுமனைத்தும் ஈசன் முன்னமேயே உத்தேசித்ததுதான். இவ்வுலகில் வசிக்கும் ஒவ்வொருவனும் ஈசனது உத்தேசத்தில் ஏதோ ஒரு பாகத்தை நடைபெறச் செய்வதற்கே ஏற்படுத்தப்பட்டவன். ஆகையால் ஈசுவரன் தனது உத்தேசம் நிறைவேறும் வண்ணம் நம்முடைய ஸகாயத்தை யெதிர்பார்க்கிறார். இதிலிருந்து இப்பிரபஞ்சத்திலுள்ள ஒரு சிறிய அணுக்கூட ஜகத்கார்யத்தில் ஏதோ ஒரு பாகத்தை நடத்த வேண்டியே சிருஷ்டிக்கப் பட்டுளது என்பது வெளியாகிறது. நாமொவ்வொருவரும் எந்தத் தொழிலிலிருந்தாலும், ஈசனது எண்ணம் நிறைவேறும் பொருட்டேற்பட்ட கருவிகள், ஈசனது சைதந்யம் வெளியே பரவும் பொருட்டு நிர்மிக்கப்பட்டிருக்கும் கால்வாய்களென நினைக்கவேண்டும், குழந்தை விளையாடுவதற்கும், வக்கீல்கள் நியாயவாதம் செய்வதற்கும, வைத்தியர்கள் வியாதிகளை சொஸ்தப்படுத்துவதற்கும், சூரியன் புஷ்பங்களை மலரச்செய்வதுபோல் உபாத்தியாயர்கள் குழந்தைகளினறிவை மலர்த்துவதற்கும் ஏற்பட்டுள்ள ஈசுவரகருவிகள். இப்படி ஒவ்வொருவரும் தாங்கள் எவ்வித பிரவிர்த்தியிலிருந்தாலும் ஈசுவரனுடைய காரியத்தை நடத்துகிறோ

மென்கிற அபிப்பிராயமிருக்கிறபக்ஷத்தில்அதுவே ஆத்மிகப் பயிற்சியாகும். எந்த வேலையைச் செய்கிறோமென்பது முக்கியமல்ல, அதை எவ்வித மனோபாவத்தோடுசெய்கிறோமென்பதே முக்கியமானது. இந்த மனோபாவமே ஆத்மிகத்தையும் அநாத்மிகத்தையும் சேர்த்து ஐக்யப்படுத்தும், உலகபிரவிர்த்தியை பகவத்பரமாக்கும். பிரஹ்ம வித்யை (தியாஸபி) இந்த விஷயத்தை நன்கெடுத்துக் காட்டுகிறது.

ஒரு யந்திரம்போல் தோற்றப்படுமிவ்வுலகில் பகவான் அநேகம் தொழில்களை யேற்படுத்தியிருக்கிறார். பூஜைசெய்வதால் தான் அல்லது கோயில்களுக்குப் போவதால் மட்டுமே ஆத்மிகப்பயிற்சி யேற்படுகிறதென்பதில்லை. நமக்கேற்பட்டதொழிலை நாம் மனப்பூர்த்தியாக ஈசுவரதாஸனாகநின்று நம்மாலானவரையில் சரிவரச்செய்வதே ஈசுவர சம்மதமானது. சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், உலகைத் துறந்து வேறெங்காவது செல்வதால் ஆத்மக்ஞானமேற்படப் போகிறதில்லை, உலகில் நின்று எவ்விடத்திலும் ஈச்வர சைதந்யத்தை யநுபவிப்பதுதான் மேலான ஆத்மக்ஞானமாகும்.

இவ்விதம் செய்யும் பக்ஷத்தில் பிருகிருதி சாஸ்திரத்திற்கும் ஆத்ம சாஸ்திரத்துக்கு முள்ளதாய் தோன்றும் பரஸ்பர விரோதம் நீங்கும். பிரஹ்ம வித்தையின் உதவியால் நாம் எப்படி உலகத்தில் பிரவிர்த்தித்துக்கொண்டே ஈசுவர ஞானிகளாய் விளங்கலாமென்பது நன்கு தெளிவாகிறது.

R. ஸ்ரீநிவாச ஐயர் எம். ஏ.

## வறுமை.

பல நாடுகளிலும் புலவர்களிற் பலர் கல்விச் செல்வம் நிறைந்திருந்தும் பொருட் செல்வம் பெறாததால் வறுமையால் துன்புற்று நொந்தனர் என்று படித்தும் கேட்டும் இருக்கிறோம். "வறியோர்க் கழகு வறுமையிற் செம்மை" என்றபடி நல்குரவாற் பீடிக்கப்பட்ட காலத்தும் பழியொடு பட்ட செல்வத்தை விரும்பாது எல்லாத் துன்பத்தையும் சகித்து வாழ்பவர் சிலரேயாம். தமிழ்ப் புலவர்களில் வறுமை யுற்றவர்கள் அத்துன்பத்தை நீக்குமாறு செல்வச் செருக்கால தன்னை மறந்து, கர்வித்து செருக்குற்ற தனவான்களிடம் சென்று இரந்து பாடிய பாடல்களையும் நல்குரவை நிந்தித்துப் பாடிய பாடல்களையும் படிக்குங்கால் வறுமையின் கொடுமை எவ்வாறு அவர்களை வருத்தியது என்பது புலப்படும்.

"இருவே றுலகத்தியற்கைத் திருவேறு தெள்ளியராதலும் வேறு" என்றபடி பொருட் செல்வம் படைத்தாருள் கல்வி யருமை யறிவார் சிலரே யானபடியால் புலவர்கள் யாசிக்குங் கால் பலகாலும் மானக்கேடடையும்படி நேருகிறது. வறுமையின் கொடுமையோ மற்றத் தாழ்ச்சியை நோக்காது அப்பிணி தீரும் வழியைக் கைப்பற்றும்படி செய்கிறது. ஆதலால்

"மானங் குலங் கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயற்சி வாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசி வந்திடப் பறந்துபோம்."

என்பதனுண்மை புலவர்கள் அநுபவத்தாற் காணும்படியாகிறது.

புறநானூற்றில் பரிசில் இரந்து பாடிய பாடல்கள் பல உள. அக்காலத்தும் புலவர்கள் வறுமையால் துன்புற்றிருந்தனர் என்பது விளங்குகிறது. பெருஞ் சித்திரனார்

என்ற புலவரது அருமைப் பாடல்கள் வறுமைத் துன்பத்தை நன்கு விளக்குகின்றன. அவைகளுள்

*    *    "புதல்வன் பன்மாண்
பாலில் வறுமுலை சுவைத்தனன் பெறுஅன்
கூழுஞ் சோறுங் கடைஇ யூழி
னுள்ளில் வறுங்கலந் திறந்தழக் கண்டு
மறப்புலி யுரைத்து மதியங் காட்டியு
நொந்தனள்.''    *    *    *

என்று பாடியிருப்பது வறுமை குடி புகுந்த வீட்டின் சீர் கேட்டை எவ்வளவு நன்றாய்க் காட்டுகின்றது!

படிக்காசுப் புலவர் என்ற புலவர் ஒருவர் கல்வியில் மிகுந்த தேர்ச்சியடைந்து நினைத்ததும் கவிபாடும் வல்லமை பெற்றிருந்தனர். அவரது திறத்தைப் புகழ்ந்து

" மட்டாருந்தென் களந்தைப் படிக்காசன்
உரைத்த தமிழ் வரைந்த ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும்
பரிமளிக்கும் பரிந்தவ் ஏட்டைத்
தொட்டாலும் கை மணக்கும் சொன்னாலும்
வாய் மணக்கும் துய்ய சேற்றில்
நட்டாலும் தமிழ்ப் பயிராய் விளைந்திடுமே
பாட்டின் நறு நளினத்தானே "

என்றார் ஒரு புலவர். இத்தகைய சிறப்பு வாய்ந்த படிக்காசுப் புலவர் வறுமையால் மிகவும் பீடிக்கப்பட்டார். அத்துன்பத்திற்கு ஆற்றாது பரிதபித்து தமது கல்வியை வெறுத்து

"அடகெடுவாய் பலதொழிலும் இருக்கக் கல்வி
அதிகமென்றே கற்றுவிட்டோம் அறிவில் லாமல்
திடமனமோ கனமாடக் கழைக்கூத் தாடச்
செப்பிடு வித்தைகளாடத் தெரிந்தோ மில்லை,
தடமுலை வேசையராகப் பிறந்தோ மில்லை
சனியான தமிழைவிட்டுத் தையலார் தம்
இடமிருந்து தூதுசென்று பிழைத்தோம் இல்லை
என்னஜனமம் எடுத்துலகில் இரக்கின் றோமே.''

என்று வயிறெரிந்து கதறியிருக்கிறார்.

பொருள் படைத்திருக்கும் நிமித்தத்தால் குணக்கேடனாயினும் தனவானாயிருப்பின் அவனிடம் சென்று அவனைப் புகழ்ந்து பாடி அப்படியும் பொருள் பெறாது வருந்திய புலவர் பலர். இவ்வுண்மையைச் சுட்டியே சுந்தரமூர்த்தி நாயனாரும் தமது திருப்புகலூர் தேவாரத்தில் அடியில் வருமாறு பாடியிருக்கிறார்.

“ * மிடுக்கிலாதானை வீமனே விறல் விசயனே வில்லுக்கிவ னென்றும்,
கொடுக்கிலாதானைப் பாரியே † யென்று கூறினுங் கொடுப்பாரில்லை,
பொடிக்கொள் மேனியெம் புண்ணியன் புகலூரைப் பாடுமின் புலவீர்காள்,
அடுக்குமேல மருலகமாள்வதற்கி யாதுமையுறவில்லையே''

“ நரைகள் போந்து மெய் தளர்ந்து மூத்துடல் நடுங்கி நிற்கு மிக்கிழவனை
வரைகள் போல் திரள் தோளனே யென்று வாழ்த்தினுங் கொடுப்பாரில்லை,
புரை வெள்ளேறுடைப் புண்ணியன் புகலூரைப் பாடுமின் புலவீர்காள்,
அரையனா யமருலகமாள்வதற்கியாது மையுறவில்லையே''

“ கற்றிலாதானைக் கற்று நல்லனே காமதேவனை யொக்குமே
முற்றிலாதானை முற்றனே யென்று மொழியினுங் கொடுப்பாரில்லைப்,
பொருந்திலார்த்தைகள் பாட்டறு புகலூரைப் பாடுமின் புலவீர்காள்
அத்தனாயமருலகமாள்வதற்கியாது மையுற வில்லையே.''

“ தையலாருக்கோர் காமனே சால நல்லழ குடையையனே,
கையுலாவிய வேலனே யென்று கழறினுங் கொடுப்பாரில்லைப்,
பொய்கை வாவியின் மேதிபாய் புகலூரைப் பாடுமின் பலவீர்காள்,
ஐயனா மருலகமாள்வதற்கியாதுமை யுறவில்லையே.''

---

* மிடுக்கு=வலிமை † பாரியே=ஒரு சிறந்த கொடையாளி.

இந்நாயனார் போன்றவர்கள் இவ்வுண்மையை அறிந்து வறுமை வந்த விடத்தும் நரஸ்துதி செய்வதைத் தவிர்ப்பார்கள். சித்தத்தைச் சிவன் பாலே வைத்த திருநாவுக்கரசு நாயனாரும்.

"சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
"மங்குவா ரவர்செல்வ மதிப்போ மல்லோம்
மாதேவர்க்கே காந்த ரல்லராகில்
"அங்கமெலாங் குறைந் தழுகுதொழு நோயரா
யாவுரித்துத்தின் றுழலும் புலையரேனுங்
"கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பராகி
லவர்கண்டீர்நாம் வணங்குங் கடவுளாரே"

என்று திருவாய் மலர்ந்தருளினார்.

புலவர்களைக் கண்ட மாத்திரமே அவர்களைப் பழித்துத் துரத்தும் தனவான்களும் உண்டு. இத்தகையோரிடம் சென்று மானக்கேடுற்று மெலிந்த புலவர்களும் பலர் இருந்திருக்கிறார்கள். இதைக் குறிப்பிட்டே முதுகுளத்தூர் பெரிய சரவணக் கவிராயர் அடியில் வருமாறு பாடியிருக்கின்றனர்.

"வாருநீர் யாரென்ன வித்துவா னென்னவு
மதிமோசம் வந்த தென்றே
"வாய்குழறி மெய்யெலா மிகநடுக் குற்றுநீர்
வந்தகா ரியமே தெனச்
"சீருலா வியகாம தேனுவே தாருவே
சிந்தா மணிக்கு நிகர்வோய்
"செப்புவச னத்தரிச் சந்த்ர னேயெனலுஞ்
சினந்திரு கணுஞ் சிவந்தே
"ஆரைநீ மாடு கல்மர மென்று சொன்னது
மலால்அரிச் சந்த்ர னென்றே
"அடாதசொற் சொன்னையே யார்க்கடிமை யாகினே
னர்கையிற் பெண்டு விற்றேன்
"தீருமோ விந்தவசை யென்றுரை செய்வெகு
கொடியதீயரைப் பாடி நொந்தேன்
"திருமன்றுள் நடுநின்று நடமொன்று புரிகின்ற
தென் றில்லை நட ராஜனே."

"பசிப்பிணி யென்னும் பாவி"யின் கொடுமையை சகிக்சலாற்ருது மானத்தை யிழந்து இரந்து பொருள் தேடிய புலவர்கள் பலராயினும் அவர்கள் இரக்கும்படி நேர்ந்தது அவர்கள் வறுமையாலேயே யன்றி வேறல்ல. சிலர் "புலிபசிக்கினும் புல்லருந்தாமை" போல இரத்தலை விடுத்து தாம் பெற்றது சிறிதேயாயினும் அதையே பெரிதாக மதித்திருந்தனர். பெரும்பாலும் பக்தர்கள் இவ்விதமே இருந்திருக்கின்றனர். பக்திச் செல்வமாகிய பெரும்பேறு பெற்றவர்களுக்கு மற்றச் செல்வ மெல்லாம் அற்பமே:

"உண்பது நாழி யுடுப்பது நான்குமுழம்" என்றபடி உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாததுசிறிதேயாம். சிறிது பெற்றும் மனவமைதி பெற்று வாழ்வதே நல்வாழ்வு: "செல்வமென்பது சிந்தையினிறைவே அல்கா நல்குரவு அவாவெனப் படுமே" என்றபடி மனவமைதிபெற்ருேர் எவ்விதத்திலும் நல்குரவற்றவர்கள். "போதுமென்ற மனமே பொன் செய்யு மருந்து"

G. A. சுந்தரம் ஐயர். பி. ஏ. பி. எல்.

---

## நன்மொழி.

---

கொடுமை யென்பது செய்கையில் மாத்திரமல்ல, வாய்ப்பேச்சிலுமிருக்கிறது. வேண்டுமென்றே வேறொரு ஜீவஜந்துவுக்கு உபத்திரவஞ் செய்வது கருதிச் செய்யும் கொடுஞ் செயலாம்.

சில சமயங்களில் கவனியாது சொல்லும் ஒரு வார்த்தை, வர்மத்துடன் சொல்லிய வார்த்தைபோல் துன்பத்தை விளைவிக்கின்றது. ஆகையால், அறியாமல்கூட உன்னைக் கொடுஞ் செயல்களுக்கு உட்படுத்திக்கொள்ளாது ஜாக்ரதையா யிருக்கவேண்டும்.

—ஸத்குரு சரணங்களில்.

---

220

## புத்தக வரவு.

ஐரோப்பிய யுத்தம்:—ஜி. எ. வைத்தியராமனால் இயற்றப் பட்டது. தற்காலத்தில் நடந்துவரும் பெரும் போரைப் பற்றி வர்த்தமான தினசரிப் பத்திரிகைகளைப் படித்துவரும் ஒவ்வொருவருக்கும், இந்த யுத்தம் நடப்பதற்கு முதற் காரணமென்ன, ஒவ்வொரு சார்பாரும் யாது லாப நஷ்டங்களை யுத்தேசித்து சேர்ந்திருக்கிறார்கள், யுத்தத்தின் அங்கங்களாகிய சைந்யங்கள் யுத்தக் கப்பல்கள், பீரங்கிகள், ஆகாயக் கப்பல்கள், ஏரோப்பிளேன்கள் இவைகளின் விவரங்கள் என்ன என்று அறிய விரும்புவோர்களுக்கும் இன்றியமையாதது. யுத்தத்தின் உபாங்கங்களான சைந்ய போஷண ஏற்பாடுகள், ஆஸ்பத்திரிகள் இவைகளைப் பற்றியும் விஸ்தாரமான விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இந்த யுத்தத்தில் சம்பந்தப்பட்ட தேசங்களின் அரசர்கள் சேனைபதிகள் மந்திரிகள் முதலிய முக்யஸ்தர்களுடைய விருத்தாந்தங்கள் அவசியமான மட்டில் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அநேகமாக இந்திய புஸ்தகங்களில் காணப்படாதவையான மனிதர் படங்களும், தேசப் படங்களும் ஏராளமாகக் காணப்படுகின்றன. ஆரம்பம் முதல் அந்தம் வரை யெழுதப்பட்ட யாவும் மிகவும் தெளிவாக இருக்கின்றன.

இப்புத்தகம் செந்தமிழ் நடையில் எழுதப் படவில்லை. செந்தமிழில் எழுதப்படவேண்டுமென்று எண்ணமும் ஆசிரியர்க்கிருப்பதாயும் தோன்றவில்லை. தமிழ் பாஷையில் வழங்காத பல பதங்களை கூச்சமின்றி உபயோகப் படுத்தியிருக்கிறார். மேலும் ஸம்ஸ்கிருத பாஷையிலிருந்து வந்த பதங்களை அப்பாஷையிலும் உபயோகிப்பது போலவே தமிழில் வரையப் பட்டுள்ளது. 'சீக்ரம்' 'ப்ரியம்' 'மந்த்ரி' 'ப்ரதம' 'வர்ஷம்' முதலிய பதங்களை வேறு மாதிரி வழக்கம்போல் உபயோகிக்கலாம் என்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். ஆனால் மிகவும் கடினமானதும் சாஸ்திர விஷயங்கள் பல அடங்கியதும் சாதாரணமாய் வழக்கத்திலில்லாததுமான பல சமாசாரங்களை மிகத் தெளிவாக எழுதியிருப்பது மிகவும் மெச்சத் தகுந்ததே. இத்தகைய விஷயத்தை சகலரும் அறியும்படி எழுத முன்வந்த ஆசிரியர் அங்ஙனமே மேனாட்டு பௌதிக சாஸ்திர புத்த

களையும் தமிழில் மொழி பெயர்த்து தமிழறிவாளருக்குப் பயன் படுமாறு முயலுவாராக. இப்புத்தகம் மிகவும் நல்ல தாளில் அழ அச்சிடப் பட்டிருக்கின்றது.

---

அரும்பொருட்டிரட்டு:—மாணவர் செந்தமிழ்ச்சங்க அக்கிரசன ப்தியும் விவேகோதயம் பத்திராதிபருமான பிரஹ்மஸ்ரீ ம. கோபால கிருஷ்ண ஐயரால் மூன்று பாகங்களாக வெளியிடப்பட்டது. முதல் பாகத்தில் ஐயரவர்களால் சமயத்துக்குத் தக்கவாறு பாடப் பெற்ற இரங்கற்பாக்களும், வாழ்த்துப் பாடல்களும், துதிகளும், இதரச்செய்யுள்களும் அடங்கியுள்ளன. இரண்டாம்பாகத்தில் ஆங்கி லச் செய்யுள்களில் சிறந்தவைகளைத் தமிழ்ச் செய்யுளாய் மொழி பெயர்த்துள்ளார். மூன்றும் பாகத்தில் ஆசிரியர் செய்த உபந்நி யாசங்களும் எழுதிய வியாசங்களும் அடங்கியிருக்கின்றன. இம் மூன்று பாகங்களையும் படித்து மிகவும் ஆனந்தமும் லாபமும் பெற் றோம். இவரது பாடல்கள் மிக்க சுலபமான நடையில் எழுதப் பட்டு பொருள் மாட்சியையும் பெற்றிருக்கின்றன. சாதாரண மா ணவனும் பெண்பாலாரும் எளிதில் அறியக்கூடியவாறு இசைக்கப பட்டிருப்பதால் இவரது பாடல்களை யாவரும் படித்துப் பயனடை வார்கள் என்பது திண்ணம். ஆங்கிலத்தில் ஐயரவர்களுக்குள்ள தேர்ச்சியின் வன்மையாலும் தமிழில் உள்ள பாண்டித்யத்தாலும் அவர் செய்துள்ள மொழி பெயர்ப்புச செய்யுள்கள் மிக்க அழகு வாய்ந்தனவாய் இருக்கின்றன. அவைகளில் பெரும்பான்மை சுய மாகவே தமிழில் இயற்றியவை போலிருக்கின்றன. மொழி பெயர்ப்புகளில் முதனூற்செய்யுளின் அழகும்,பொருளும்,பொருந் துவது சிரமம். அப்படியிருக்க இவ்வாசிரியரின் மொழி பெயர்ப்பு கள் முதனூலிலுள்ள பொருள் வளம், சொல்வளம் குன்றாது இருப்பதோடு, தமிழ் மொழியின் பொலிவும் பொருந்தியிருக்கின் றன. மூன்றும் பாகத்துள்ள வியாசங்கள் ஆக்கியோருடைய ஆழ் ந்த யோசனையையும், தீர்ந்த ஆராய்ச்சியையும், ஆங்கிலத்துள்ள இலக்கியங்கள், சரித்திரங்கள், இயற்கை சாத்திரங்களிவைகளின் பழக்கத்தையும், மாதிரு பூமி விசுவாசத்தையும், ராஜ விசுவாசத் தையும், தமிழ் பாஷையில்அவருக்குள்ள அபிமானத்தையும். பாண் டித்தியத்தையும் நன்கு விளக்குகின்றன.

---

இந்தியாவில் குழந்தைகளின் பாதுகாப்பு:—The care of Infants in India ஆங்கிலத்தில் மெல்லின்ஸ் ஆகார கம்பேனியாரால் எழுதுவிக்கப்பட்டு பிரசுரம் செய்யப்பட்டது. முக்கியமாய் ஆங்கிலத் தாயார்களின் உபயோகத்துக்காக எழுதப்பட்டது, எனினும், இந்த புத்தகத்தில் பொதுவாய்க் குழந்தைகளின் பாதுகாப்பைப் பற்றி மிகவும் உபயோகமுள்ள விஷயங்களும் புத்திமதிகளும் அடங்கியிருக்கின்றன. குழந்தைகளுக்கு சாதாரணமாக வரும் வியாதிகள், அவைகள் வருவதற்கு காரணம், வியாதிகளை விலக்கும் விதம், ஆரோக்கியமுள்ள குழந்தையின் சாதாரண கனம், உயரம், பருமன், குழந்தைகளின் உடை, அவசர அபாயங்களின் விலக்கு முதலிய விஷயங்கள் வெகு அழகாக விளக்கப்பட்டிருக்கின்றன. தமிழில் இதன் மாதிரி, வைத்திய நிபுணரால் புத்தகம் பிரசுரிக்கப்பட்டால நாம் மிகவும் பயன்படுவோம என்பதில் ஐயமில்லை.

---

மிருணாலினி:—விலை அணா 2. "இந்தியன் அட்வர்டைசர்" என்ற பத்திரிகை சந்தாதார்களுக்கு இனாமாகக் கொடுக்கப்படும். அப்பத்திராதிபரால் இயற்றப்பட்டது. இப்புத்தகத்தைப் பற்றி ஒரு விதமும் சிலாக்கியமாய் கூற முடியவில்லையென்று விசனிக்கிறோம். கதையும் நன்றாயமைய வில்லை. நடையும் நன்றாய் இல்லை அதில் வியக்தமாய் சொல்லப்பட்ட அபிப்பிராயங்களும் மேன்மையில்லை. ஆனால் சூசிக்கப்பட்ட அபிப்பிராயங்களோ மிகவும் கொடியவை. இக்கதையில் குறிப்பிட்டபடி ஒரு மரியாதையுள்ள இந்திய மாதும் நடக்கமாட்டாள் என்பது திண்ணம். கணவனால் நேசிக்கப் படாத மாது அன்னிய புருஷனிடம் காதல் கொள்வதும் அதை வெளியிட்டு கடிதங்கள் எழுதுவதும் இச்செயல்களை ஆசிரியர் கண்டியாது ஆமோதிப்பதும் மற்றொரு பெண் விதவையாயிருந்து தன் மனதுக்குவந்த புருஷனுடன் கலியாணமின்றி வாழ்வதும் ஆசிரியர் இதைக் கடிந்து பேசாமலிருப்பதும் இன்னும் பற்பல சூசகங்களும் இப்புத்தகம் சிறுவர் சிறுமியருக்கும் மற்றும் எவருக்கும் ஏற்றதில்லை யென்று காட்டுகின்றன.

---

# சர்வதேள் விஷ சஞ்சீவி.

## கதறிவந்தவன் களிப்புடன் செல்வான்!

### விஷந்தின்டினவன் நிமிஷத்திற் குணமடைவான்!!

### குணமில்லாவிட்டால்

## ரூபாய் 100 இனும் கொடுக்கப்படும்!!!



நண்பர்களே! ஒவ்வொரு வீட்டிலும் தேளினுடைய உபத்திரவம் பொறுக்க முடியாமல் அவஸ்தைப்படுவதை நாம் அனேகரும் கண்டு விசனமுற நேரிடுவதைப்பற்றி, நாம் அதிககஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்தமருந்து கண்டுபிடித்திருக்கிறோம். இது அநேக ஐரோப்பியடாக்டர்களாலும், தமிழ்வைத்திய பண்டிதர்களாலும், நன்கு மதிக்கப் பெற்றது. எமது மேற்கண்ட லக்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷசஞ்சீவியை தேள் கொட்டினஇடத்தில் உபயோகிக்க உடனேஒன்றிரண்டு நிமிஷத்திற்குள் குணமடையச்செய்யும். இவ்விஷ சஞ்சீவியை இன்னும் எலி, நாய் பூரான், செய்யான், பாம்பு, நண்டு, தறக்கா முதலிய எவ்வித விஷ ஜெந்துக்கள் தீண்டினபோதிலும், டைரக்ஷனில் சொன்னபிரகாரம் உபயோகித்தால் குண மடையலாம்.

மேற்சொன்னவைகளுக்கு உபயோகித்து குணமில்லாவிடில் பணம் வாபீஸ் செய்துவிடப்படும்.

இந்த லக்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷ சஞ்சீவியைக் கைப்பற்றுங்கள். இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது. ஏனென்றால், ஓர் மனிதனை இரவில் 12 மணிக்கு நித்திரையில் விஷந்தீண்டிவிட்டால், அம்மனிதன் எவ்வளவோ அவஸ்தைப்பட அநேக மருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகித்தும் பயன்படாமற் போகிறதல்லவா? அதற்காக இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு இல்லத்திலும் அவசியம் இருக்கவேண்டியது.

வேண்டுபவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

| | ரூ அ பை |
|---|---|
| விலை பாக்கெட் 1-க்கு ரூ | 0—8—0 |
| டசன் 1-க்கு ரூ | 5—0—0 |

விலாசம்:—வி. ஏ. எஸ். பாணி,

நெ. 3. இருளப்பன் தெரு, மதராஸ்.

## இந்தியாவில் மிகப்பெரிதும் பழமையுமான வைத்தியசாலை எது ?

1881-௵ல் ஜாம்நகரில் ஸ்தாபிக்கப்பட்ட

# ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்.

குழந்தைகளுக்கு சகலரோகங்களையும் குணப்படுத்தும்.

**சஞ்சீவி**

**பாலமித்ர.**

300 மாத்ரை கொண்ட டப்பி 1-க்கு ரூபா 1.

வியாதியைப்பற்றி விபரமாய் தெரிவிப்போருக்கு நன்றாய் ஆலோசனைசெய்து திருப்தியான விடைகொடுக்கிறோம்.

கடிதங்களுக்கு உடனே பதில் எழுதப்படும்.

**இந்த**

ஔஷதாலயத்தில் விருத்த வைத்திய பாரங்கதரும், வித்தியா பட்டம்பெற்ற மேதாவிகளும், சாஸ்திர சம்பன்னர்களும் திறமை வாய்ந்த அதிகாரிகளுமாக நூற்றுக்கணக்கான ஜனங்கள் உத்தியோகம் செய்கிறார்கள்.

**முதன்மையான**

மருந்து சென்ற 35-௵ காலமாய் உபயோகிப்போருக்கு அற்புதகுணத்தைக் கொடுத்து தேகபலத்தையும் மனோவன்மையும் கொடுத்து பெரும்புகழ் படைத்திருக்கிற ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள் 32. மாத்ரையின் விலை ரூ 1.

வைத்திய சாஸ்திரி
**மணிசங்கர் கோவிந்தஜீ**
ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்,
157, பிராட்வே, மதராஸ்.
96, மவுண்ட்ரோட், மதராஸ்.

இருமல், கபம், காசம் இவைகளுக்கு சிறந்த மருந்து.

**காசாந்தக**

மாத்ரைகள் டப்பி 1-க்கு விலை ரூ 1.

இதுவரை எங்கள் கேட்லாக்கை பார்த்திராவிடில் உடனே உங்கள் விலாசத்தை எழுதுங்கள் எவ்வித செலவில்லாமலும் இனமாய் அனுப்புகிறோம்.